ஆசார்ய கிருபளானி

1947

V2:5147 M88
N47
108367

377 4159

# ஆசார்ய கிருபளானி



பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

108367

# இளைஞன் கனவு

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்

(நேதாஜி)

வங்காளியில் எழுதியது

தமிழ் மொழிபெயர்ப்பு

ஸ்ரீ. த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

பொருளடக்கம்

கட்டுரைகள்

1. இளைஞன் கனவு
2. அன்னையின் அழைப்பு
3. சில முக்கியமான வார்த்தைகள்

கடிதங்கள்

4. "உன்பொருட்டு இந்தக் களங்கச் சுமையை வகிப்பதே எனது இன்பம்"
5. சமூகத் தொண்டும் குடிசைத் தொழிலும்
6. நல்லொழுக்கமும் உயரிய மனப்பான்மையும்
7. சிறையும் கைதியும்
8. கட்சிச் சண்டையும் வங்காளத்தின் வருங்காலமும்
9. ஹிந்து - முஸ்லிம் உடன்படிக்கை
10. சிறைமீளும் பேச்சிற்கு மறுமாற்றம்
11. வாழ்க்கையின் லக்ஷியம்
12. வட கல்கத்தா வாசிகளுக்கு ஒரு விண்ணப்பம் (க)
13. ... (உ)
14. தேசபந்து

—— விலை ரூ. 2—0—0 ——

அல்லயன்ஸ், கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4


# ஆசார்ய கிருபளானி


ஆசிரியர்

கே. எஸ். ஜம்புநாதன்



அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை - 4

பிரைட்] 1947 [விலை அணா 10

## எங்கள் தேசீய நூல்கள்

மஹாதேவ கோவிந்த ரானடே
ஜனாதிபதி ரூஸ்வெல்ட்
லோகமான்ய திலகர்
பாஞ்சால சிங்கம் லஜபதி ராய்
பண்டிட் மோதிலால் நேரு
பாபு ராஜேந்திர பிரஸாத்
எல்லைக் காந்தி கப்பார்கான்
அபுல் கலாம் ஆஸாத்
அன்னை கஸ்தூரி
என் சரிதம்-மஹாத்மா காந்தி
நேதாஜி சுபாஷ் போஸ்
ஸர்தார் படேல்
ஜான்ஸி ராணி
மார்ஷல் ஸ்டாலின்
புதுமைக்கவி பாரதியார்
அரங்கசாமி ஐயங்கார்
பண்டிட் மாளவ்யா
ஸரோஜினி தேவி
புக்கர் வாஷிங்டன்
தீனபந்து ஆண்ட்ரூஸ்
ரமாபாய் சரஸ்வதி
சுவாமி ராமதீர்த்தர்

44159
M. I. P. PROJECT
Microfilmed
108367
N47

48 பக்கங்கள்
ராஜன் பிரஸிலும்,
மீதி அல்லயன்ஸ் பிரஸிலும்,
அச்சிடப்பட்டது.
எம். எஸ். 109 - மார்ச் - 1947

# ஆசார்ய கிருபளானி

## 1. நிலைக்களம்

பிரிட்டனில் தொழிற்கட்சி மந்திரி சபை அமைத்துச் சர்க்கார் நடத்த முன்வந்ததும் இந்தியாவுடன் ஒரு கண்ணியமான சமரஸம் பேசிக்கொள்ள வேண்டுமென்று தொழிற்கட்சிப் பிரமுகர்கள் எண்ணினார்கள். பிரதமர் ஆட்லியும் கட்சிப் பிரமுகர்களின் அபிப்பிராயத்தைக் கௌரவித்து, இந்தியாமந்திரி ஸ்ரீ பெதிக் லாரன்ஸ் ஸ்ரீ ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஸ்ரீ அலெக்ஸாண்டர் ஆகியவர்கள் அடங்கிய ஒரு மந்திரிசபைத் தூது கோஷ்டியை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். சண்டித்தனம் செய்யும் காயிதே ஆஜம் ஜின்னாவையும் சாத்விகமூர்த்தி காந்தியடிகளையும் நாட்டின் மற்றத் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து, தாற்காலிகமாக ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்

அந்தத் தூது கோஷ்டியினர். அதை ஏற்றுக் கொண்டது பிரிட்டிஷ் சர்க்கார். காந்தியடிகளின் ஆணைக்கு ஏற்பக் காங்கிரஸ் தலைவர்களும் நாட்டு மக்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டனர். எங்கே பார்த்தாலும் சமரஸ மனப்பான்மை இருப்பதைக் கண்ட ஜின்னாசாகிப் திடீரென வக்கரித்துக்கொள்ளவே சமரஸம் முறிந்தது.

ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் சும்மா இருக்கவில்லை; இந்தியாவின் சுதந்தர எழுச்சியையும் மக்களின் கண்விழிப்பையும் சர்வதேச அரசியல் நிலைமையையும் கவனித்து, அவர்கள் எப்படியாவது இந்தியத் தலைவர்களுடன் சமாதானம் செய்துகொள்ள வேண்டுமெனத் துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள். 'காங்கிரஸையும் தேசமக்களையும் விரோதித்துக் கொண்டால் இனி ஜம்பம் சாயாது. வியாபாரச் சலுகைகூடக் கிடைக்காது. இந்தியாவை இழந்துவிடவேண்டிய நிலைமை வந்துவிடும்' என்ற பயம் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளுக்கும் வியாபாரிகளுக்கும் வந்துவிடவே, மீண்டும் வைசிராய் பிரிட்டனின் சார்பாகக் காங்கிரஸ் தலைவர்களுடன் சமரஸம் பேச ஆரம்பித்தார். லீகின் கூட்டுறவு கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் மத்தியசர்க்காரை நடத்தும் பொறுப்பை காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது. அதன் பலனாக ஸ்ரீ ஜவாஹர்லால்நேருவின் தலைமையில் காங்கிரஸ் ஓர் இடைக்கால சர்க்காரை அமைக்கத் தீர்மானித்தது. அதை வைசிராயும் பிரிட்டிஷ்



சர்க்காரும் ஏற்றுக்கொண்டு 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதியன்று ஜவாஹர்லால் நேருவிடம் சர்க்காரை ஒப்பித்து, இடைக்கால சர்க்கார் ஏற்பட்டுவிட்டதாகப் பிரகடனம் செய்தார்கள்.

பார்ஸி, இந்தியக் கிறிஸ்தவர், சீக்கியர் ஆகிய சிறுபான்மை வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் அளித்து, வைசிராய் காங்கிரஸ் லீக் சம்பாஷணையில் லீக் கோரியபடி முஸ்லீம் பிரதிநிதிகளுக்கு ஐந்து ஸ்தானங்களும் கொடுப்பதாகக் கூறிக் காங்கிரஸ் தலைவர்கள் சர்வகட்சிச் சர்க்காரை அமைத்தார்கள். அரசியல் துறையில் பண்பட்ட அந்தத் தலைவர்களை ஆசீர்வதிக்கும்போது காந்திஜி "இன்று நாம் சுதந்தரத்தின் தலைவாயிலை அடைந்துவிட்டோம். இனித்தான் நமது பொறுப்பும் சிரமமும் இருக்கின்றன" என்று கூறிவிட்டு, "பதவி மோகம் கொண்டு நம் தலைவர்கள் இடைக்கால சர்க்காரில் பதவி வகிக்கவில்லை. கடமையும் பொறுப்பும் உணர்ந்து அவர்கள் தேசத்தின் பிரதிநிதிகளாகச் சர்க்காரில் சேர்ந்திருக்கிறார்கள். நாட்டின் அதிகாரிகளென அவர் முடிசூட்டிக் கொள்ளவில்லை. சாந்தமும் தயையும் போதித்த ஏசுநாதர் அணிந்த முள் கிரீடத்தைத்தான் அவர்கள் அணிந்துகொள்கிறார்கள்" என்றார்.

மத்திய சர்க்காரில் துணைத்தலைவராகப் பதவி ஏற்றதால் நேருஜி ராஷ்டிரபதி பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆகவே, தேச

மக்கள் ஆசார்ய கிருபளானியை அவரிடமிருந்து பதவி ஏற்றுக்கொள்ளத் தேர்ந்தெடுத்தனர். ஜவாஹரைப் போன்ற தைரியமும் அரசியல் தீரமும் ஸோஷலிஸ்டு தத்துவமும் கொண்டவர் ஆசார்ய கிருபளானி. ஜவாஹரைப் போலவே காந்தி பக்தர். தீவிரமாகக் காந்தீய தத்துவத்தை ஆராய்ந்து அனுபவித்து வாழ்க்கை நடத்திவருபவர் அவர். காந்தீய தத்துவத்திற்கு விசேஷ வியாக்கியானம் செய்யும் ஆற்றலும் செயலும் உள்ளவர்.

ராஷ்டிரபதி பதவிக்கு ஆஸாதும், ஆசார்ய கிருபளானியும் சிபாரிசு செய்யப்பட்ட போது ஆஸாத் தாம் மீண்டும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை என்று ஒதுங்கி நின்றதுடன் ஆசார்ய கிருபளானியே தற்சமயம் நாட்டிற்கு வழிகாட்டும் பொறுப்பை ஏற்கும் தீரமுள்ளவர் என்று கூறினார். அப்படித்தான் மற்றத் தலைவர்களும் எண்ணினார்கள். ஆசார்ய கிருபளானியின் தேர்தலைப்பற்றிக் குறிப்பிடும்போது காந்திஜி, "அவர் முள்கிரீடம் மட்டும் தரிக்கவில்லை. முள்ளாலான படுக்கையிலும் படுத்துக்கொள்ளும் ஆற்றலுள்ளவர். அவரது பொறுப்பும் கடமையும் அதிகம்" என்றார். அத்துடன், "அவர் அஹிம்ஸையின் தத்துவத்தை நன்றாக அறிந்தவர். வீரமும் தீரமும் நிறைந்த அந்த வாலிபர் அன்பினால் பிறரை வசப்படுத்தவும், ரத்த வெறியின்றிச் சாவை அன்புடன் அணைத்துக்கொள்ளவும் மக்களுக்குப் போதிப்பார்" என்று குறிப்பிட்டார்.



ஆசார்ய கிருபளானி நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றபோது அரசியல் வானம் தெளிவாகத் தோன்றினாலும், மாரிக்காலத்தில் நட்சத்திரங்களைக் காட்டி, கருமேகப் போர்வைக்குள் மூடிக்கொள்ளும் ஆகாயம் போல்தான் இருந்தது. காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதுடன் (தனது சொந்தப் பொறுப்பில்) பெருந்தன்மையுடன் லீகும் சர்க்காரில் கலந்துகொள்ள ஐந்து ஸ்தானங்களை ஒதுக்கிவைத்தது. ஆனால் லீக் அந்தக் குறிப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. மகா பாரதக் கதையிலுள்ள காந்தாரிபோல, வயிறு எரிந்து முஸ்லீம் சமூகத்திற்குக் கொள்ளிவைத்துக் கொம்மாளம் போட்டது.

பிரிட்டிஷ் சர்க்கார் லீகின் சமிக்ஞையைப் புறக்கணித்துக் காங்கிரஸிடம் தாற்காலிக சர்க்காரை ஒப்பிக்க நிச்சயித்ததும், லீக் ஏகாதிபத்தியத்தின் கொள்கையைக் கண்டிக்கும் தோரணையில் 'நேரடி நடவடிக்கை, என்ற பூச்சாண்டிகாட்டி ஹிந்து முஸ்லிம் கலவரத்தைக் கிளப்பிவிடப்பிரசாரம் செய்தது. நேரடி நடவடிக்கை என்பது என்னவென்று தலைவர்கள் சரிவரச் சொல்லுமுன்னேயே வங்க முஸ்லிம் லீகர்கள், பிரதம மந்திரி ஷுஹ்ரவர்த்தியுடன் சதியாலோசனை செய்து கல்கத்தாவிலுள்ள ஹிந்துக்களை மிருகத்தனமாகத் தாக்கி 1946-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16வ 'நேரடி நடவடிக்கை' நாடகம் ஆடித் தீர்த்தனர். அன்று நடந்த கலகத்தில் ஹிந்து முஸ்லிம் என்ற பேதமின்றி ஆயிரக்

கணக்கான அப்பாவிகள் உயிரிழந்தனர். ஆயிரக் கணக்கான குடும்பங்கள் நாதனிழந்து சந்தியில் நின்றன. இதன் விளைவாக நாடெங்கும் ஹிந்து முஸ்லிம் மாச்சரியம் வலுத்தது.

ராஜ தந்திரம், ஒற்றுமை, சமரஸம் என்னும் அரசியல் பதங்களைச் சொல்லிக்கொண்டு வைசிராய் வேவல் பிரபுவும் காங்கிரஸ் கட்சிக்கும் ஹிந்து சமூகத்தினருக்கும் தீங்கிழைக்க முன்வந்து லீகுடன் உறவாட ஆரம்பித்தார். ஏகாதிபத்திய ரத்தத்தில் ஊறிக்கிடக்கும் வைசிராய் வேவல் பிரபுவுக்கு நாட்டின் நிர்வாகத்தை மக்களிடம் ஒப்பித்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறச்சம்மதமில்லை. பிரிட்டிஷ் சர்க்கார் இணங்கினாலும் இங்கு ஏதாவது விஷமம் செய்து நாட்டின் முன்னேற்றத்தைத் தடுத்துக் கொண்டிருப்பதில் அவருக்கு ஆனந்தம்; அதனால் லாபமும் கூட. ஆகவே அவர் லீக் தலைவர்களுடன் நைச்சியமாகப் பேசிச் சர்க்காரில் இழுத்துவிட்டு இடைக்கால மந்திரி சபையில் ஒற்றுமைக் குறைவும் நிர்வாக ஊழலும் ஏற்படுத்தச் சதி செய்தார். அதற்கு லீகும் இணங்கி ஐந்து பிரதிநிதிகளைத் தேர்ந்து அனுப்பியது.

மனப்பூர்வமான ஒத்துழைப்பும் கண்ணியமும் இருந்தால்தானே நேர்மை இருக்கும்? ஆகவே லீக் நான்கு முஸ்லிம் பிரதிநிதிகளையும் ஹரிஜனங்களின் சார்பாக ஒரு முஸ்லிம் கையாளையும் தேர்ந்தெடுத்தது. வங்காளத்திலுள்ள ஹரிஜனங்களின் க்ஷேமத்தில் கண்ணும் கருத்தும்கொண்டு, அவர்களு



டைய க்ஷேமத்திற்காகவும் நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டோரின் நலன்களைக் காப்பாற்றுவதற்காகவும் அந்த வங்காளக் 'குவிஸ்லிங்கை' லீகின் சார்பாகப் பொறுக்கி எடுத்தார்களாம். காங்கிரஸ் ஹரிஜனங்களுக்குத் தீங்கிழைக்காமல் பாதுகாக்கவே இந்தப் பிரதிநிதியை அனுப்பியிருப்பதாகவும், காங்கிஸைப் போலவே லீகுக்கும் ஹரிஜன முன்னேற்றத்தில் அக்கறையுண்டு என்று உலகிற்கு எடுத்துக் காட்டவும் இந்த “மகத்தான தியாகத்தை”ச் செய்ததாம் லீக். 'ஆடு நனைகிறதே என்று ஓநாய் உட்கார்ந்து அழுததாம்' என்பது போல, ஒரு புறம் அம்பேத்கர் கோஷ்டியைச் சேர்ந்த ஹரிஜன வகுப்புவாதிக்குச் சர்க்காரில் இடம் கிடைக்கச் சிபாரிசு செய்துவிட்டு. மறுபுறம் ஆயிரக்கணக்கான ஹரிஜனப் பெண்களை மானபங்கம் செய்தும், கத்தி முனையில் மதமாற்றம் செய்தும் அனுதாபம் காட்டினர் லீகர்கள். வங்காளத்திலுள்ள நோவாக்காளி, திப்பராப்பகுதிகளில் நேரடி நடவடிக்கையின் பக்கவெட்டாகக் கிளம்பியவை வகுப்புக் கலகமும் முஸ்லிம்களின் ஆதிக்கமும். அங்குள்ள ஜாதி ஹிந்துக்கள் ஹரிஜனங்கள் ஆகியோரின் பரிதாப நிலைமையை நேரில் கண்டு காங்கிரஸ் கமிட்டிக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஆசார்ய கிருபளானி சென்று திரும்பியதும், “இதைவிட மிருகத்தனமாகச் சம்பவம் நடந்திருக்கவே முடியாது. அங்கே பெண்கள் பட்ட ஹிம்ஸையும், லீகர்களின் கூலிகள் நடத்திய கொள்ளை, கொலை, தீவைத்தல் முதலிய செய்கை

களும் கேட்போர் ரத்தம் சுண்டும்படி யானவை" என்று கூறினர்.

வங்காளத்தில் வகுப்புவாதம் தலைவிரித்தாடி, லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் நஷ்டமடைந்த போது கூட லீகர்கள் திருப்தியடையாமல் பிற மாகாணங்களிலும் வகுப்புக் கலவரம் ஏற்படவேண்டும் என்னும் ஆசையுடன் வெறியூட்டும் அறிக்கைகளை விட்டுப் பாமர முஸ்லிம்களைத் தூண்டிக் கொண்டிருந்தனர். பிற மாகாணங்களில் முஸ்லிம்கள் படும் அவஸ்தைக்குப் பழிவாங்கும் தோரணையில்தான் கல்கத்தா, நோவாக்காளி நாடகங்களை நடத்தியதாகச் சொல்லிக் கொக்கரித்தனர்.

இதன் நடுவே லீக் பிரதிநிதிகள் தங்களுடைய ஹரிஜனத் தோழருடன் இடைக்கால சர்க்காரில் பதவியை ஒப்புக்கொண்டு உள்ளேயும் குழப்பத்தை விளைவிக்க முற்பட்டனர். அவர்களுக்கு அனுசரணையாக அதிகார வர்க்கமும் பசப்பிக் கொண்டிருந்தது.

ஏகாதிபத்திய சர்க்காரின் பிரதிநிதிகளும், அவர்களது வார்ஸான அரசியல் இலாகாவும் காங்கிரஸ் மந்திரிகளைத் திணறவைக்கத் தம்மால் இயன்ற கைங்கரியத்தில் ஈடுபட்டனர். அதன் பலனாக, எல்லைப்புற மாகாணத்திலும் சமஸ்தானங்களிலும் சலசலப்பு ஏற்பட்டது. வாஜிரிஸ்தான் போன்ற பகுதிகளில், பிரிட்டிஷ் அரசியல் இலாகா, லீக் பிடியாள்களை அனுப்பிக் காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரம் செய்தது. ஒன்றிரண்டு பகுதிகளில்



மலைச்சாதியனரின் கொந்தளிப்பை அடக்குவதாகச் சாக்குச் சொல்லி விமானம் மூலம் குண்டுகளை வீசி அந்த மக்களைப் பதற அடித்ததுடன், ஹிந்து காங்கிரஸ் பதவி ஏற்றதனால் வந்த பயனிது என்று வாய்கூசாது சொல்லி அந்த மலைச்சாதி முஸ்லிம்களிடமும் துவேஷப் பிரசாரம் செய்தார்கள்.

மாகாணங்களிலும் மத்திய சர்க்காரிலும் பதவி ஏற்ற காங்கிரஸ் தலைவர்கள் நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்ய முயன்றதுடன், லீக் சர்க்கார் அச்சின் சதியையும் எதிர்த்து நின்று எதிர்கால இந்தியாவின் அரசியல் அந்தஸ்தை நிர்ணயிக்க அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதிலும் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரி நெருக்கடியான கட்டத்தில்தான் மீரட்டில் தேச மக்கள் ஒன்றுகூடி ஆசார்ய கிருபளானியைக் கௌரவித்துத் தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்டனர்; கோட்டையின் புறத்தே பாசறை அடித்துப் போர்முரசு கொட்டும் வலிமை வாய்ந்த எதிரியை முறியடித்து, நாட்டு மக்களைத் துன்பமும் துயரமும் அண்டாது காப்பாற்றும் ஆற்றலும், தீரமும், ராஜதந்திரமும், கடமையுணர்ச்சியும் உள்ள அரசனின் நிலைமையில்தான் ஆசார்ய கிருபளானி ராஷ்டிரபதி பீடத்தில் அமர்ந்தார்.

அஹிம்ஸையினால் வாழ்க்கையில் அமைதியும் சாந்தியும் கண்டு தத்துவ போதனை செய்யும் ஆசார்ய புருஷனைப்போல வாழவில்லை கிருபளானி.

வாழ்க்கையிலே அவர் பள்ளிக்கூட உபாத்தியாயர் பதவி ஏற்றுக்கொண்டாலும், கல்லூரிப் படிப்பை அவர் என்றுமே மாணவர்களுக்குப் போதிக்க வில்லை. சம்சார சாகரத்தில் தீரத்துடன் நீந்தி அரசியல் கொந்தளிப்பைச் சமாளிக்கும் ஆற்றலைத் தான் அவர் போதித்து வந்தார். புரட்சியும் வீரமும் அவரது ரத்தத்தில் ஊறிய குணங்கள். அஹிம்ஸையினால் அவை பட்டைதீர்த்த வைரம் போலப் பிரகாசிக்கின்றன. சுமார் முப்பது வருஷங்களுக்கு முன்பு அவர் காந்திஜியைச் சந்தித்த போதே அஹிம்ஸா மாணவராக மாறிவிட்டார். என்றாலும், அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பேயே அவர் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டார். வங்காளப் பிரிவினை, சுதேசிக் கிளர்ச்சிபோன்ற அரசியல் கொந்தளிப்பில் சிக்கிக் கல்லூரியிலிருந்து வெளியேறியவர் கிருபளானி. தயாதாட்சண்யமின்றி உள்ளதை உள்ளபடியே சொல்லும் நேர்மைக்குணம் படைத்த கிருபளானியைக் கண்டு எதிரிகள் கௌரவிப்பார்கள்; பசப்பும் நண்பர்கள் பயந்து ஒதுங்குவார்கள்.

சிந்தனையிலும் செயலிலும் அவர் புரட்சி வீரர். சமதர்ம தத்துவத்தில் தீவிரப் பற்றுள்ளவர் என்றாலும் மேல்நாட்டுத் தத்துவங்களை இறக்குமதி செய்து கிராமபோன் மிஷின்போலத் திருப்பித் திருப்பிச் சொல்லிப் பிரசாரம் செய்வதை வெறுப்பவர். போர்க்கோலம் பூண்டிருந்த காங்கிரஸ் இன்று நாட்டின் நிர்வாகப் பொறுப்பை



ஏற்றிருப்பதால், ராஷ்டிரபதியின் பொறுப்பும் சிரமும் அதிகமே. உள்ளேயும் வெளியேயும் நின்று போராடும் காங்கிரஸுக்குத் தீரத்துடன் வழிகாட்டும் ஆற்றல் தமக்கு உண்டு என்பதை நிரூபிக்கும் சந்தர்ப்பம் இன்று ராஷ்டிரபதி கிருபளானிக்கு ஏற்பட்டிருக்கிறது. சிறந்த போர்வீரர், அற்புதமான நிர்மாணத் திட்ட சேவகர் என்று பெயர் எடுத்துள்ள கிருபளானி, முதல்தரமான தளகர்த்தர் என்ற பெயரும் வாங்கிவிடுவார் என்பதில் சந்தேகமே இல்லை.

ஜின்னா, சாது வாஸ்வானி, ஆகாகான், ஜயராம் தாஸ், ஆசார்ய கித்வானி முதலியவர்கள் தோன்றிய ஸிந்து மண்ணில்தான் ஆசார்ய கிருபளானியும் பிறந்தார். ஆனால் ஜின்னாமாதிரி அரசியலில் மத வெறியைப் புகுத்திப் போராட்டம் ஆடும் சாகஸமோ, ஆகாகான் மாதிரி மதகுருவாக ராஜ போகத்தில் வாழும் பாக்கியமோ ஆசார்ய கிருபளானிக்குக் கிடையாது. மாகாணப் பற்றுக்கொண்டு அவர் சிந்துவிலேயே தங்கிச் சேவை செய்து வந்தால் இன்று அங்கே அரசியலில் குட்டை குழப்பிக்கொண்டிருக்கும் ஹிதயதுல்லாவுக்கும், ஹாரூனுக்கும் இடம் இராது. மதவெறி கொண்டு திமிராகப் பேசும் கஸ்தார், கூரோ போன்ற வகுப்பு வாதிகள் அரசியல் வானில் தோன்றி யிருக்கவே முடியாது.

'மூவுலகமும் எனது தேசம்' என்று அன்று பாடிய சிவபக்தர்கள் கோஷ்டியைச் சேர்ந்தவர்

ஆசார்ய கிருபளானி. 'பாரத தேசமே எனது தாயகம். நாட்டின் சேவையே எனது வாழ்க்கை விரதம்' என்னும் மனப்பான்மையுடையவர் அவர்.

---

## 2 குடும்பம்

ஜீவத்ராம் பகவன்தாஸ் கிருபளானி சிந்து மாகாணத்தைச்சேர்ந்த ஹைதராபாத்தில் பிறந்தவர். அவருடைய தந்தை காகா பகவன்தாஸ் தாசில்தாராக உத்தியோகம் பார்த்து வாழ்ந்தவர். அந்தக் காலத்தில் எல்லாப் பெற்றோர்களும் எண்ணியது போலவே, காகா பகவன்தாஸும் தம் மைந்தர்கள் சிறந்த பக்திமான்களாக, ஸ்வதர்மத்தை விடாது சர்க்காரில் விசேஷப் பதவி வகித்துப் பேரும் புகழும் பெற்று வாழ வேண்டுமென எண்ணினர். ஆனால் அவரது சீமந்த புத்திரனைத்தவிர மற்றவர்கள் அனைவரும் வெவ்வேறு மார்க்கத்தில் ஈடுபட்டார்கள் என்றாலும் ஒவ்வொருவரும் பேரும் புகழும் பெற்றனர்.

அமீல் வகுப்பைச் சேர்ந்த காகா பகவன்தாஸ் பரம பாகவதர். சதா வைஷ்ணவ நாமமும், பூஜையுந்தான். வயிற்றுப் பிழைப்பிற்காக அவர் சர்க்காரில் சேவகம் புரியவில்லை. உள்ளூரில் பிரமுகராக வாழ்வதுடன் மக்களுக்குத் துன்பம் நேரிடாமல் பாதுகாக்க வேண்டும் என்னும் தூய எண்ணத்துடன் தான் அவர் தாசில்தார் உத்தியோகம் ஏற்றார். அவரது பக்தியையும் மேதையையும் கண்டு மேலதிகாரிகள் கௌரவிப்பார்கள்; பாமரா வணங்குவார்கள்; அவரது கோபத்தைக் கண்டு எதிரிகள் நடுநடுங்குவார்கள்.



ஆசார்ய கிருபளானியுடன் பிறந்தவர்கள் ஐந்து சகோதரர்களும் கிகிபென் என்ற சகோதரியும். கிருபளானி ஆறுவது புத்திரர். அவருக்குப்பின் பிறந்த கடைக்குட்டி கிகிபென். ஆகவே இந்தக் குழந்தைகள் இருவரும் செல்லக் குழந்தைகளாகவே வளர்ந்து வந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்டதன் பயனாகப் படித்த குடும்பங்களிலே ஒரு கலகலப்பு ஏற்பட்டது. அந்தச் சுழலிலே கிருபளானியின் குடும்பமும் சிக்கிற்று. சிறு குழந்தையிலிருந்தே துஷ்டத்தனமும் முரட்டுப் பிடிவாதமும் உள்ள கிருபளானியே தேசீய இயக்கத்தில் குடும்பத்தில் முன்னணியில் நின்றார். வங்காளப் பிரிவினையின்போது அவர் பள்ளிக்கூடத்தில் நடத்திய கிளர்ச்சியின் பயனாகப் படிப்பை நிறுத்தும் நிலைமைகூட வந்துவிட்டது.

கிருபளானியின் சகோதரர்களில் ஒருவர் சுதேசிக் கிளர்ச்சியில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டதுடன் ஹைதராபாத்தில் ஒரு சுதேசிக் கடையும் ஏற்படுத்திப் பிரசாரம் செய்தார். மற்றுமொரு சகோதரர் ஒரு தச்சுப் பட்டடை வைத்துக் காலக்ஷேபம் செய்ய ஆரம்பித்தவர் திடீரென வேதாந்த மார்க்கத்தில் ஈடுபட்டுச் சந்நியாசம் வாங்கிக் கொண்டு வீட்டை விட்டுச் சென்றுவிட்டார்.

பரமபாகவதரான காகா பகவன்தாஸருக்குத் தம் புத்திரர்களின் போக்கைக்காணச் சிறிது பிரமிப்பும் ஆச்சரியமுமே ஏற்பட்டன. வைஷ்ணவ பக்தி நிறைந்த அந்தப் பெரியார் தம் குடும்பத்தில் ஏற்பட்ட மாறுதல்களை மௌனமாக ஏற்றுக்கொண்டு ஆண்டவன் சித்தம் என்று எண்ணி வாழ்ந்தார்.

அரசியலில் தீவிரமான பற்றுள்ள பகவன்தாஸ் குடும்பம், காந்திய யுகம் ஆரம்பித்த புதிதில், ஊடே தோன்றிய கிலாபத் இயக்கத்தில் விசேஷ சிரத்தை காட்டிற்று. ஏற்கனவே முஸ்லிம் சோதரர்களுடன் பழகிய கிருபளானியின் சகோதரர்கள், சென்ற மகாயுத்தம் முடிந்த பின்பு துருக்கியின் பால் நேச நாடுகள் காட்டிய மனப்பான்மையைக் கண்டு வெகுண்டனர். துருக்கியின் அந்தஸ்தைக் காக்கவேண்டுமென்று கிளர்ச்சி செய்து அநுதாபம் காட்டிய இந்தியர் கோஷ்டியில் கலந்துகொண்டனர். கிலாபத் இயக்கம் ஆரம்பித்ததும் ஸிந்து மாகாணத்தில் அதன் தீவிரப் பிரசாரகர்களாக மாறினார்கள். முஸ்லிம்களுடன் நெருங்கிப் பழகியதனால் கிருபளானி சகோதரர்களில் இருவருக்கு இஸ்லாம் மதத்தில் ஒரு விசேஷப் பற்று ஏற்பட்டது. அடிக்கடி அவர்கள் தம் முஸ்லிம் நண்பர்களுடன் மசூதி சென்று பிரார்த்தனைகளில் கலந்துகொள்வதுண்டு. அதன் விளைவாக ஒருவர் மதம் மாறியதுடன் இஸ்லாமிய கலாசாரத்தையும் அரசியல் முறையையும் காண அரபு நாடுகளுக்குச் சென்றுவிட்டார். பின்பு ஏற்பட்ட துருக்கி கிரீஸ் யுத்தத்தில் அவர் துருக்கியின் சார்பாகப் போரிட்டு வீர சுவர்க்கம் புகுந்ததாகத் தெரிகிறது.



முஸ்லிம் மதத்தில் பற்றுக்கொண்ட கிருபளானியின் மற்றொரு சகோதரர், கிலாபத் இயக்கத்தின்போது முஸ்லிமாகியதுடன், இந்திய சுதந்தரக் கிளர்ச்சிக்கு உதவிதேட ஆப்கானிஸ்தானத்திற்குச் சென்றாராம். ஆப்கன் அரண்மனையில் அவருக்கு விசேஷ ஆதரவும் மரியாதையும் கிடைத்தன என்றாலும் அவரது அரசியல் தூது வெற்றி பெறவில்லை. அதன் பிறகு அவர் சென்றவிடமே தெரியவில்லை. சகோதரர்களைப்போலவே சகோதரி ஜீஜிபென்னும் இளம் வயதிலிருந்தே அரசியலில் விசேஷசிரத்தை காட்டி வந்தார். பிற்காலத்தில் அவர் மனம் சமூக சேவையில் ஈடுபட்டுவிட்டது.

## 3. கல்விப் பருவம்

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் பள்ளி மாணவன் ஒருவன் உற்சாக மிகுதியினால் மேஜை மீதிருந்த இங்கிப் புட்டியை எடுத்து வீசி எறிந்து உடைத்தான். புத்தகங்களை எடுத்து நாற்புறமும் வீசிக் குதித்தான். கணக்கு, சரித்திரம் முதலிய புத்தகங்கள் நடு வீதிக்குச் சென்றன. ஆங்கிலக் கவிதைத் தொகுதி ஒன்று தவிர மற்றப் புத்தகங்கள் எல்லாம் குப்பைத் தொட்டிக்குள் சென்றன. அவனது களிவெறியாட்டத்தை மௌனமாக

ரசித்துக் கொண்டு எதிரே உட்கார்ந்திருந்தான் மால்கனி எனும் மாணவன். பிற்காலத்தில் வாழ்க்கைப் பாட்டையில் தாங்கள் இருவரும் கைகோத்துக் கொண்டு வெகுதூரம் செல்லப் போகிறோம் என்ற நினைப்பே அவர்கள் இருவருக்கும் அப்போது தோன்றவில்லை.

புத்தகங்களைத் தூக்கி எறிந்து கொம்மாளம் போட்ட அந்த வாலிபன் தான் கிருபளானி. படிப்பிலே அவருக்கு மோகம் இல்லை. குமாஸ்தா உத்தியோகத்தைக் குறிக்கோளாகக் கொண்டு நெட்டுருப் போட்டுப் படித்துப் பரீட்சைக்கு எழுதுவதிலே ஒரு வெறுப்பு. ஆனல் அந்த நாளிலிருந்தே ஆங்கிலக் கவிதைகளிலே அவருக்கு ஓர் அலாதி ருசி. அந்தக் காலத்திலேயே காங்கிரஸ் சுதந்தரக் கொடியைத் தூக்கிவிட்டது என்றாலும் தீவிரமாகப் போராட்டத்தில் இறங்க வில்லை; கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது, பெரிய மனிதர்களும் பிரபலஸ்தர்களும் ஒன்ருகக் கூடி, மகாநாடு நடத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றிப் பிரியும் காலம். ஆகவே ஆங்கிலப் படிப்பிலும், ஆங்கிலேயரிடத்தும் வெறுப்பு ஏற்படாத காலம் அது.

கிருபளானியின் அறையிலே பாடப் புத்தகங்களைத் தவிர ஆங்கிலக் கவிஞர்களின் உருவப் படங்களும் புத்தகங்களும் ஏராளமாக இருக்குமாம். பள்ளித் தோழர்களுக்கு, அவர் கவிதைகளைப் படித்துக் காட்டி ரசிப்பதுண்டாம். வங்காளப் பிரிவினையும் சுதேசி இயக்கமும் ஏற்பட்டவுடன்,



கிருபளானியின் வாழ்க்கையிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தீவிரவாதியான திலகரின் போதனைகளில் அவரது மனம் ஈடுபட்டது. ஆங்கில மோகம் அவரை அறியாமலே விட்டு அகன்றது. ஆனல் அவரது கவிதையுள்ளத்தில் ஆங்கிலக் கவிதைகளுக்குப் பதில் ஹிந்தி, பாரசீகக் கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றன. பிரபல சூபி கவிஞரான ஷா அப்துல் லதீப் அவர்களின் கவிதைத் தொகுதியை அவர் எங்கே சென்ருலும் எடுத்துச் செல்வது வழக்கமாயிற்று.

ஹைதராபாத்தில் மெட்ரிகுலேஷன் படித்ததும் மேற்படிப்பிற்காகக் கிருபளானியும் அவருடைய தோழர் மால்கானியும் பம்பாயிலுள்ள வில்சன் கல்லூரியில் வந்து சேர்ந்தனர். பள்ளி நேரம் போகப் பாக்கிநேரத்தில் அரசியல் சர்ச்சையும் ஆவேசமான பிரசங்கங்களுந்தான் அந்த வாலிபர்களுக்குப் பிரதான வேலையாயின. இண்டலாகவும் ஆணித்தரமாகவும் பேசும் கிருபளானியின் வார்த்தைகளில் மயங்கி நின்றனர், அநேக வாலிபர்கள். அதைக் கண்டு கல்லூரி நிர்வாகிகள் வெகுண்டனர்.

சுதேசி இயக்கம் வலுவடைந்ததும், கோட்டும் சராயும் அணிந்து செல்லும் கிருபளானி, சாதாரண வேஷ்டியும் சொக்காயும் அணிந்து கையில் தடியுடன் வெளியே செல்ல ஆரம்பித்தார். பம்பாயில் நடந்த சுதேசி இயக்கத்தில் அவர் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டதன் பயனுகக் கல்லூரித்

தலைவர் டாக்டர் மாக்கிக்கானுடைய கோபத்திற்கு ஆளாகிக் கல்லூரியை விட்டே வெளியேறும் நிலைமை வந்தது.

வங்காளத்தில் சுதேசிப் புயல் வீச ஆரம்பித்த போது அதன் வேகம் நாடெங்கும் பரவிற்று. தெற்கே அமரர் சிதம்பரம் பிள்ளை சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்து வெள்ளையரைத் திணறச் செய்தார். அவரது தீரத்தைப் பாராட்டிப் பம்பாய் வாசிகள் அந்தக் கம்பெனியில் பங்கெடுத்துக் கொண்டு பணம் கொடுத்தனர். ஆனால் ஸிந்து மக்கள் மட்டும் மேல்நாட்டு மோகத்திலிருந்து விடுபட வில்லை. ஏன், இன்றும் கூட அங்குள்ள அரசியல் தலைவர்கள், பட்டம் பதவி வேட்டையில் தீவிரமாக இருக்கிறார்களே தவிர, நாட்டு மக்களின் க்ஷேமத்தைப்பற்றியும் தேசவிடுதலையைப்பற்றியும் அதிகக் கவனம் செலுத்தவில்லையே!

நடை உடை பாவனைகளில் மேல்நாட்டாரைப் போல வாழ்வதுதான் கௌரவம் என்று எண்ணி வாழ்ந்த கராச்சி மக்கள் வங்காளத்தில் ஏற்பட்ட அரசியல் எழுச்சியினால் கண்விழிப்பு அடைய வில்லை. ஆகவே அமைதியும் சாந்தியும் நிறைந்த கராச்சியில் சென்று தம் மகன் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்று எண்ணினார் காகா பகவன் தாஸ். பம்பாயை விட்டு வீடு திரும்பிய கிருபளானிக்கும் என்ன செய்வது என்ற திகைப்புத்தான். அவரது பேச்சும் பிரசங்கமும் கேட்டு உள்ளூர் வாலிபர்கள் பிரமித்தனரே தவிர உணர்ந்து அவ



ருடன் தோள் கொடுத்து நிற்க முன்வராததால் மனத்தில் சோர்வு ஏற்பட்டது. வீட்டிலிருப்பது சிறைத் தண்டனை போன்றிருந்ததால் அவர் தம் தந்தையைத் திருப்தி செய்ய வேண்டிக் கராச்சியி லுள்ள டி. ஜே. சிந்துக் கல்லூரியில் சேர்ந்தார். அதனால் ஒரு மாறுதலும் மனசாந்தியும் கிடைத்தன. ஆனால் அங்கும் அவர் வெகு சீக்கிரத்தில் வெள்ளை ஆசிரியர்களின் கோபத்திற்கு ஆளாக வேண்டியதாயிற்று.

வங்காளக் கிளர்ச்சியை ஆதரித்து 1907-ஆம் ஆண்டில் கல்லூரியில் அவர் ஒரு வேலை நிறுத்தம் நடத்தி வெற்றி பெற்றார். இதனால் கல்லூரித் தலைவர் ஜாக்ஸனின் வெறுப்புத்தான் எஞ்சிற்று. அதன் பிறகு ஜாக்ஸன் இவருடைய வகுப்பிற்கு வரும்போதெல்லாம் அடிக்கடி வெள்ளையரின் மேதைபற்றியும் அரசியல் சாணக்கியம் பற்றியும் புகழ்ந்து பேசுவதுடன், இந்தியரை இழிவுபடுத்தியும், பாட போதனையின் நடுநடுவே பேசுவது வழக்கமாகி விட்டது. அநேக நாட்கள் வரை கிருபளானி இந்த நிந்தையைச் சகித்து வந்தார். ஏற்கனவே கலகக்காரன் என்ற கெட்ட பெயர் எடுத்துவிட்டால் மீண்டும் ரகளை செய்து அதிகாரிகளின் விரோதத்தை அதிகமாக்கிக் கொள்ள வேண்டாமென்று அவர் மனத்தை அடக்கிக்கொண்டிருந்தார். அவரது மௌனத்தினால் உற்சாகமடைந்த டாக்டர் ஜாக்ஸன் ஒருநாள் கிருபளானியையும் மற்றத் தேசபக்தியுள்ள மாணவர்களையும் கிண்டிவிட்டு

துவங்க முடியவில்லை. 1912-ஆம் ஆண்டில்தான் அவர் எம். ஏ., பரீட்சையில் தேறிச் சுக்கூரில் பள்ளிக்கூட ஆசிரியராகப் பதவி ஏற்ருர். ஆனல் அதிசீக்கிரம் அவர் அங்கிருந்து வெளியேற வேண்டியதாயிற்று. கிருபளானியின் சுதந்தர அபிலாஷைகளுக்கும், அரசியல் மனேபாவத்திற்கும் பள்ளிக்கூட நிர்வாகிகளின் போக்கு ஒத்துக் கொள்ளவில்லை. குஜராத்திலும் சிந்துவிலும் ஐந்தாறு பள்ளிக்கூடங்களில் வேலை பார்த்து விலகிவிட்டு,1914-ஆம் ஆண்டில் பீஹாரிலுள்ள முஸபர்பூர் கல்லூரியில் பேராசிரியர் பதவி ஏற்ருர். மற்ற ஆசிரியர்களைப்போல மிடுக்குடனும் ஜபர்தஸ்துடனும் இராது, மாணவர்களுடன் கலகலப்பாகப் பழகி, சதா அவர்களுடனிருக்கும் கிருபளானியின் போக்கு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. கிருபளானி பீஹார் சென்றபோது அவருடைய பாலியத் தோழன் மால்கானியும், அந்தக் கல்லூரியில் ஆசிரியர் பதவி பெறவே, வேற்று மாகாணத்திற்கு வந்தும் கிருபளானி பாஷையும் பழக்கமும் மாறுதல் காரணமாகப் பிரமிப்புத் தட்டி நிற்கவில்லை. அவரது கலகலப்பான குணத்தினுலும் சௌஜன்ய பாவத்தினுலும் அவரைச் சுற்றி ஒரு கோஷ்டி மாணவர்கள் சதா இருந்துகொண்டே இருந்தார்கள். அவரைத் தம் பேராசிரியர் என்று எண்ணுது, உடன் பிறந்த சகோதரருடன் பழகுவதுபோல நெருங்கிப் பழகியதுடன் 'தாதா' (அண்ணு) என்றும் அழைக்க ஆரம்

பித்துவிட்டனர். பின்பு அவர் ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் 'அண்ணு' வாகவே இருந்தார். குஜராத் வித்தியாபீடத்திற்கு வந்தபிறகு சக ஊழியர்கள் அவரை ஆசார்ய கிருபளானி என்று அழைத்தாலுங்கூட, அவர் தம் சகாக்களுக்கு இன்றும் 'தாதா' கிருபளானியாகத்தான் இருக்கிறார்.

பீஹாருக்குவந்த பின்புதான் கிருபளானிக்குப் பாரசீக உருதுக் கவிதைகளை ஊன்றிப் படிக்கும் சந்தர்ப்பமும் சமயமும் கிடைத்தன. அவர் கவிதை இயற்றவில்லையென்றாலும் கவிதை உள்ளம் படைத்தவர், ரசிகர்; ஆங்கிலக் கவிஞர்களிடம் அரசியல் காரணமாக வேற்றுமை ஏற்பட்டாலும் கூட ஆங்கிலக் கவிதையிலும் ஸிந்து, பாரசீகக் கவிதையிலும் அவருக்கு மோகம் குறையவில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவரும் ஆசார்ய மால்கானியும் ஷா அப்துல் லதீப்பின் பாடல்களைப் படித்து ரசித்துக் கொண்டிருப்பார்கள். பீஹார் மாணவர்களுக்குப் புரியாவிட்டாலும் அவர்கள் ஆதரவுடன் அவர்களைச் சூழ்ந்திருப்பது வழக்கம்.

சம்பாரானிலுள்ள அவுரித் தோட்ட மக்களின் துயரைப் பரிசீலனை செய்ய காந்திஜி பீஹாருக்கு வருமட்டும் ஆசார்ய கிருபளானியின் வாழ்க்கை அமைதியாகத்தான் இருந்தது. காந்திஜியை அவர் நேரில் கண்டதுமே தம்மை உய்விக்க வந்த ஞான குரு இவர்தாம் என்று கண்டுகொண்டார் போலும். அன்றிருந்து அவர் புரட்சியிலும் பலாத்காரத்திலும் தமக்கிருந்த நம்பிக்கையைத் தளர்த்திக்கொண்டு அஹிம்ஸை உபாசகராகிவிட்டார். பீஹாரில் கிருபளானி இருந்த காலத்தில் வங்காளத்தில் புரட்சி இயக்கம் உச்சஸ்தாயியிலிருந்தது. ரகசிய சங்கங்கள் பல வேலை செய்து கொண்டிருந்தன. புரட்சித் தலைவர்களில் பலர் பீஹாரில் வசித்து வந்ததுடன் கிருபளானியுடனும் கூடத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் காந்திஜியின் சந்திப்பிற்குப் பிறகு கிருபளானி அடியோடு மாறிவிட்டார் என்றே சொல்லவேண்டும்.



* * * *

"ஆசார்ய கிருபளானியை 1915-ஆம் ஆண்டில் நான் முதல் முதலாகச் சந்தித்தபோதே அவர் தேசீய இயக்கத்தில் பண்பட்ட வீரராக இருந்தார். அப்போது அவர் மாதம் நானூறு ரூபாய் சம்பளத்தில் பேராசிரியர் பதவியிலிருந்தார். ஆனால் ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தாது மாதம் நாற்பது ரூபாய்களைச்சொந்தச்செலவிற்குஎடுத்துக்கொண்டு மிகுதியை (சிந்து மாகாணத்திலுள்ள) ஹைதராபாத்தில் டாக்டர் சோயித்ராம் நடத்திவந்த பிரம்மச்சரிய ஆசிரமத்திற்கு (நன்கொடையாக) அனுப்பி வந்தார். அவரது எளிமையும் தூய்மையும் நிறைந்த வாழ்க்கை போற்றத்தக்கது.

"ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்ததும் அவர் நல்ல வருவாயுள்ள பேராசிரியர் பதவியைத்

துறந்துவிட்டுப் போர்க்கோலம் பூண்டு கதர் அபிவிருத்தியில் ஈடுபட்டார். கதர்த் தொண்டராக அவர் செய்த சேவை மெச்சத்தக்கது. பின்பு சர்தார் வல்லபாய் படேல் விருப்பத்திற்கிணங்கக் குஜராத் வித்யாபீடத்தில் சேர்ந்து (அதன் தலைமை ஆசிரியர் பதவி ஏற்று) அந்த ஸ்தானத்திற்குப் புத்துணர்ச்சியும் உற்சாகமும் ஊட்டினார். கதரிடம் அவருக்கு இருக்கும் நம்பிக்கையும் பக்தியும் காரணமாக இப்போது உற்சாக மிகுந்த ஊழியர்களுடன் அவர் ஐக்கிய மாகாணத்தில் கதர் அபிவிருத்தியில் கவனம் செலுத்திச் சேவை செய்துவருகிறார். அவரது உற்சாகத்தையும் சேவையையும் கண்டு ஒவ்வொரு தேசபக்தனும் பொறாமைப்படுவான். பாரத தேசமே தனது தாயகம் என்ற எண்ணத்தினால் அவர் சொந்த மாகாணத்தை விட்டுப் பீஹாரிலும் ஐக்கிய மாகாணத்திலும் வாழ்ந்து அற்புதமான சேவை செய்து வருகிறார். உற்சாகத்திற்கு ஈடாக அவரிடம் முன்கோபமும் இருக்கிறது என்றாலும் அவரது அன்பிலும் ஆதரவிலும் ஈடுபட்டவர்கள் அந்தத் துர்க்குணத்தைப் பாராட்ட மாட்டார்கள். ஆசார்ய கிருபளானியைப்போல நமக்கு ஊழியர்கள் கிடைத்தால் அவர்களிடமுள்ள முன்கோபத்தைக் கூட நாம் சகித்துக் கொள்ளலாம். அம்மாதிரி ஊழியர்களின் சேவையினால் நமது லக்ஷியம் சுலபமாகக் கிட்டிவிடும்.'' என்று உப்பு சத்தியாக்கிரகத்திற்கு முன்பு மக்களை, அடுத்துவரும் போராட்டத்திற்குத் தயாரிக்க ஐக்கிய மாகாணத்



தில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது காந்திஜி ஆசார்ய கிருபளானியைப் பற்றி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். காந்திஜியிடம் யாருமே சுலபமாக நல்ல பெயர் வாங்கிவிட முடியாது. தென் ஆபிரிக்காவில் அஹிம்சையின் பலத்தினால் அற்புதங்களைச் சாதித்த காந்திஜி முதல் முதலாகச் சம்பாரனில் தான் தமது கொள்கைகளுக்கு இந்தியாவில் எம்மாதிரி வரவேற்புக் கிடைக்குமெனப் 'பதம்' பார்த்தார். பலாத்காரத்திலும் புரட்சியிலும் நம்பிக்கை கொண்டு தேசப் பணியாற்றிவரும் வாலிபர்கள் நிறைந்த பீஹாரில், சம்பாரனில் மக்கள்படும் துயரைக் கண்டறியக் காந்திஜி வருகிறார் என்றதுமே புது உற்சாகம் தோன்றிற்று. காந்திஜியின் சொல்லும் செயலும் செப்பிடுவித்தைபோல் இருந்தாலும் பல வாலிபர்கள் அவருடன் நெருங்கிப் பழக அவாவுற்றனர். அதற்கேற்றபடி காந்திஜி சம்பாரனில் சத்தியாக்கிரகத்தை எடுத்த எடுப்பில் தொடங்கி விடாமல், முதலில் நிலைமையை ஆராயத் துவங்கவே, அவருக்குப் பல ஊழியர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாயிற்று. கிராமவாசிகள் நடுவே அவர் மனம் விட்டுப் பழகுவதையும், சகல ஊழியர்களிடமும் அன்பாகவும் ஆதரவுடனும் நடந்து கொள்வதையும் காணக் காணத் தேசபக்தி கொண்டுள்ள ஊழியர்களுக்கு அவரிடம் ஓர் அலாதிப் பிரேமையும் பக்தியும் ஏற்பட்டன. அத்துடன் அவரது தத்துவமும் தூய்மையும் எளிமையும் வாலிபர்களை வசீகரிக்கும் சாதனமாயின.

V2:51y7 M38 108367
N47

கிராமத்தில் தங்கி மக்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று காந்திஜி அபிப்பிராயப்பட்டது பீஹாரில்தான். அதற்காக அவர் குஜராத்திலிருந்து சில ஊழியர்களை வரவழைத்தார். ஆனால் அதி சீக்கிரத்தில் ஆசார்ய கிருபளானி தமது வேலையை ராஜீனாமாச் செய்துவிட்டு நண்பர்கள் சிலருடன் காந்திஜியின் ஊழியர் குழாத்தில் சேர்ந்து கொள்ளவே காந்திஜியின் பணி மிகவும் சுலபமாகியது.

சம்பரான் சத்தியாக்கிரகத்திற்குப் பிறகு நாட்டில் நடந்த அரசியல் சம்பவங்களில் காந்திஜி தீவிரமாகச் சிரத்தை எடுத்துக்கொள்ள நேரிடவே பீஹாரில் அவருடன் சேவை செய்ய முன்வந்த ஊழியர் பிரிந்து நாட்டின் நாற்புறமும் சென்று பணியாற்றினர். ஆசார்ய கிருபளானி காசி ஹிந்து சர்வகலாசாலையில் பேராசிரியர் பதவி ஏற்றுச் சில காலம் காசியில் தங்கியிருந்தார். அங்கும் அவர் தம் மாணவர்களுக்குக் கல்வி போதித்ததுடன் அர்த்த சாஸ்திரப் பயிற்சியும் அளித்துவந்தார்.

---

## 5. காந்தி பக்தர்

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பிக்கக் காந்திஜி முஸ்தீபு செய்ததுமே ஆசார்ய கிருபளானி தமது வேலையை ராஜீனாமாச் செய்துவிட்டு அரசியலில் தீவிரமாகப் பிரவேசித்து விட்டார். அன்றிருந்து அவர் அல்லும் பகலும் தேச சேவையிலேயே ஈடு



பட்டுப் பணியாற்றி வருகிறார், 1920-ஆம் ஆண்டில் அவர் காசியில் ஒரு சில ஊழியர்களுடன் காந்தி ஆசிரமம் என்ற ஸ்தாபனத்தைச் சிருஷ்டித்துக் கொண்டு கிராமக் கல்வியிலும் கிராம சேவையிலும் ஈடுபட்டார். அப்போதே அவர் காசி வித்தியாபீடம் என்ற தேசியக் கல்லூரியை நிறுவுவதிலும் சிரத்தை கொண்டார். ஆனால் நாட்டிலிருந்த அரசியல் நிலைமையால் அவர் தீவிரமாக அந்த வித்தியாபீடத்திற்காகப் பங்கு எடுத்துக்கொள்ள இயலவில்லை. 1921-ஆம் ஆண்டு இறுதியிலிருந்து கதர் உற்பத்தியிலும் காந்தி ஆசிரம வாசிகள் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

ஒத்துழையாமை இயக்கத்திற்குப் பின்பு நாடெங்கும் தேசீயக் கல்விபற்றிப் பிரமாதமான சர்ச்சைநடந்தது.டெல்லி;மசூலிப்பட்டணம்,பாட்னா, காசி, ஆமதாபாத் முதலிய பல ஊர்களில் தேசீய சர்வகலாசாலைகள் தோன்றின. புதிய கல்வி முறை வேண்டுமென எல்லோரும் எண்ணினார்களே தவிர எம்மாதிரி இருக்க வேண்டுமெனத் திட்டம் அமைப்பதில் திகைப்பும் சிரமமும் ஏற்பட்டன. காந்திஜியின் ஆதரவினாலும் சர்தார் படேலின் முயற்சியினாலும் தோன்றிய குஜராத் வித்தியாபீடத்தில் எல்லோருடைய கவனமும் சென்றது. அதன் பாடத் திட்டத்தைப் பின்பற்றிப் பல்வேறு புதிய பள்ளிக்கூடங்கள் நாடெங்கும் எழுந்தன. குஜராத் வித்தியாபீடத்தில் அன்புப்பணி புரிய ஆற்றல் மிகுந்த பேராசிரியர்கள் முன்வந்தார்கள். அவர்களுடன் ஆசார்ய

கிருபளானியின் சேவையும் சேர்ந்தால்தான் அந்த வித்தியாபீடம் சோபிக்குமென்று வல்லபாய்படேல் விரும்பவே, ஆசார்ய கிருபளானியும் ஆசார்ய மால்கானியும் குஜராத்திற்கு வந்துசேர்ந்தனர்.

ஆசார்ய கிருபளானி தலைமை ஆசிரியர் பதவி ஏற்று 1928-ஆம் ஆண்டுவரை அங்கே சேவை செய்தார். 1928-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு ஒரு புது அரசியல் திட்டம் வகுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் சர்க்கார் சைமன் கமிஷனை இங்கு அனுப்பி வைத்தது. இந்தியர்களின் பிரதிநிதிகளின்றியே அந்தக் கமிஷன் இந்தியாவின் நிலைமையைப் பரிசிலனை செய்ய முன்வந்ததைக் கண்டு அரசியல் தலைவர்கள் கண்டித்தனர். தலைவர்களின் அபிப்பிராயத்திற்கு மதிப்புக் கொடுக்காமலே சர்க்கார் வேலை செய்ய முற்பட்டதால் நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஏற்பட்டது. போராட்டம் நேரிட்டால், தாம் முன்னணியில் நிற்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆசார்ய கிருபளானி பதவியை ராஜீனாமாச் செய்துவிட்டுத் தமது நிரந்தரத் தலைமை ஸ்தாபனமான காசி காந்தி ஆசிரமத்திற்குச் சென்றார். அடுத்து வரும் போராட்டத்திற்குத் தமது சக ஊழியர்களைத் தயாரிப்பதிலும், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறுமான கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஆசிரமம் போராட்டத்தில் பாதிக்கப்படாமலிருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்வதிலும் ஈடுபட்டார். ஏழைகளின் காமதேனுவான கதர் உற்பத்தி அரசியல் குழப்பம் காரணமாகப் பாதிக்



கப்பட்டு விட்டால் நூற்றுக்கணக்கான மக்கள் பட்டினி கிடந்துவிடுவார்களே! அவர்களது பசியும் நீங்கி, போராட்டமும் வலுவடைய வேண்டுமென்பது அவரது அவா.

குஜராத் வித்தியாலய மாணவர்கள் தங்கள் பேராசியரைக் கௌரவித்து விடையளிக்கும் போது அவரது சேவையைப் பாராட்டி, கதர் நிதிக்கென ஆறாயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பையும் கொடுத்து வணங்கினார்கள். தம் மாணவர்களிடமிருந்து அவர் விடை பெற்றுக்கொள்ளும் போது கூறிய மொழிகள் நம் நாட்டு இளைஞர்களுக்கே கூறிய மொழிகள் என்றுதான் சொல்ல வேண்டும். அதன் சுருக்கம் இதுதான்:

"இளைஞனுடைய பொக்கிஷம் ஆனந்தந்தான். உணவு உடலுக்கு வலியூட்டுவதுபோல, சந்தோஷமும் மன நிறைவும் வாழ்க்கையை வலியூட்டுகின்றன. வாழ்க்கையில் எவ்வளவு கடுமையான சோதனை நேரிட்டாலும் சரி, இன்முகத்துடன் எதிர்நிற்கும் இன்னல்களை ஏற்கும் ஆற்றல் இருந்துவிட்டால் அவை சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துவிடும். அன்பும் ஆனந்தமும் இருந்தால் கானகத்திலிருந்தாலும் சரி, கடுந்துயர் வந்தாலும் சரி, வாழ்க்கை இனிப்பாகத்தா னிருக்கும். * * *

"இன்னும் ஒரு விஷயம்: மௌனமும் சகிப்புத் தன்மையும் உங்களிடம் இயல்பாகவே ஏற்படும்படி நீங்கள் சாதகம் செய்து கொள்ளவேண்டும். வாலிபர்களுக்கு மிகவும் அவசியமான குணங்கள்

அவை. படாடோபமும் ஆரவாரமும் வாழ்க்கையின் அமைதியையும் ஆனந்தத்தையும் குலைத்துவிடும். கோவில் முதலிய புனித ஸ்தலங்களிலும், சங்கீத வினிகை நடக்குமிடங்களிலும் வாலிபர்கள் கட்டுப்பாடாக மௌனமும் சாந்தியும் இருக்கச் செய்ய வேண்டும். உள்ள நெகிழ்வும் ஈடுபாடும் ஏற்படும் அந்த இடங்களில் ஆரவாரத்தினால் அமைதியின்மை ஏற்படக்கூடாது. அதனால் சமூகத்திற்கே அவகேடு தான் ஏற்படும். அடுத்தபடியாக, பொதுக்கூட்டங்களிலும் மௌனம் அனுஷ்டிக்க நாம் பயிலவேண்டும். பிரசங்கியின் வசீகரத்தன்மைக்காகவோ, அவரது வடிவம் கண்டு ஆனந்திக்கவோ, அல்லது நாவன்மை கேட்டுக் களிக்கவோ நாம் அங்கே செல்லவில்லை. அவர் நமக்குச் சொல்ல விரும்புவது என்னவென்று தெரிந்து கொள்ளத்தான் செல்கிறோம். ஆகவே அவருக்கு அவகாசம் கொடுப்பதுடன் அமைதியாகவுமிருந்து கேட்க வேண்டும்.''

சொல்வது போலச் செயலிலும் நடக்கும் இயல்பு ஆசார்ய கிருபளானியிடம் உண்டு. அவர் வாழ்நாள் முழுவதும் பழங்கால ஆசிரியர்களைப் போல ஏழைமையேற்று வாழ்ந்துவந்திருப்பதுடன் தாம் தங்குமிடத்திலெல்லாம் ஒரு சிஷ்ய கோஷ்டியைச் சேர்த்துக் குருகுலம் நடத்தியிருக்கிறார்.

''மேதையும் ஏழைமையும் நண்பர்கள். கல்விக்குக் கனகாபரணம் வேண்டியதில்லை. கந்தல் துணி இருந்தாலும் கல்வியினால் செல்வாக்குப் பெருகும். நமது ஒளிகண்டு நாற்றிசை மக்களும் கூடுவர். வறு



மையை உதறி எறிய அறிஞனால் முடியாது என்பதில்லை. அவன் லக்ஷிய புருஷன். தியாக வாழ்வும் லக்ஷிய வாழ்வுமே அவன் விரும்புவது. ஆகவே தியாகத்தின் சின்னமாகக் கந்தல்துணி மாறிவிடுகிறது. ஏழைமையை ஏற்று வாழ்வதால் வாழ்க்கையில் எளிமையும் தூய்மையும் படிந்து மனிதன் மன்னனாகிறான். பொன்னும் மணியும் படைத்த அரசனும் அவனது கடாட்சத்திற்குக் காத்துநிற்கும் நிலைமை ஏற்படுகிறது'' என்று ஆசார்ய கிருபளானி ஒரு சமயம் கூறினார். வாழ்க்கை ஆரம்பித்ததிலிருந்தே அவர் ஏழைமையைக் கண்டு அஞ்சியதில்லை. ஆசிரியராக நூற்றுக்கணக்காகச் சம்பாதித்த காலத்தும் அவர் மிகவும் எளிமையான வாழ்க்கை நடத்தி, வருவாயில் பெரும் பகுதியைப் பொது ஸ்தாபனங்களுக்குக் கொடுத்துவந்தார்.

குஜராத் வித்தியா பீடத்திலிருந்து விலகியதும் அவர் காந்தி ஆசிரமப் பணியில் ஈடுபட்டார். அதன் பிறகு அவர் ஆசிரியர் பதவி ஏற்கவே இல்லை. கதர்த் தொண்டிலும் அரசியலிலும் அவர் கவனம் சென்றது. காசிக்குத் திரும்பியதும் அவர் சர்க்கா சங்கத்தின் நிர்வாகப்பதவிஏற்றுக்கதர் அபிவிருத்தியில் ஈடுபட்டார். காசிப் பிராந்தியத்தை விட மீரட் வட்டாரத்தில் கதர் அபிவிருத்திக்கு வசதியிருக்கவே அவர் தமது ஆசிரமத்தை மீரட்டிற்கு மாற்றிக்கொண்டார்.

உப்புச் சத்யாக்கிரக காலத்தில் ஆசார்ய கிருபளானி அரசியலில் கலந்து சிறைசெல்ல நேர்ந்தது.

நாட்டில் அமைதி ஏற்படும்வரை அவர் சிறையிலும் வெளியிலும் காலங் கழிக்க நேர்ந்தது. சிறையில் அவர் பட்ட கஷ்டம் சொல்லத் தரமன்று; தனிக் கொட்டடி, கம்பி விலங்கு என்று விதவிதமான அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டன.

---

## 6. காங்கிரஸ் காரியதரிசி

பம்பாயில் 1934-ல் காங்கிரஸ் மீண்டும் கூடியதும், ஜவாஹரின் விருப்பத்திற் கிணங்க ஆசார்ய கிருபளானி காங்கிரஸின் பொதுக் காரியதரிசி பதவி ஏற்றார். அதற்கு முன்பு பல வருஷங்களாக ஜவாஹர்தாம் அந்தப் பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்து வந்தார். ஐக்கிய மாகாணம் சம்பந்தப்பட்ட வரை ஆக்க வேலையிலும் கிராம சேவையிலும் ஆசார்ய கிருபளானி ஜவாஹரின் வலக்கரம் போன்றவர். பம்பாய்க் காங்கிரஸின் பொதுக் காரிய தரிசிப் பொறுப்பை ஜவாஹர் ஏற்றுக் கொள்ளாததற்குக் குடும்பத் தொல்லையும் சிறைவாசமுமே காரணம். ஆகவே அவருடைய சகாவான ஆசார்யரின்மீது அந்தப் பதவியைச் சுமத்தினர் தேசத் தலைவர்கள். அன்றிருந்து ஆசார்ய கிருபளானி தொடர்ந்து தாம் ஏற்ற பதவியைச் சிறப்பாக நிர்வகித்து வெவ்வேறு இயல்புள்ள நான்கு ராஷ்டிரபதிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகி யிருக்கிறார். அன்று அவர் ஜவாஹரிடமிருந்து காரியதரிசி பதவியை ஏற்றுக்கொண்டது



போல இன்று ஜவாஹரிடமிருந்தே ராஷ்டிரபதி பதவியையும் ஏற்கிறார்.

சட்ட சபை வேலைகளைவிட நிர்மாணத் திட்டத்தில்தான் கிருபளானிக்கு நம்பிக்கை அதிகம். ஆனால் அவர் தீவிர காந்தி பக்தர்களைப் போலக் காந்தீய வேதாந்தத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு அதற்கு ஆராய்ச்சியும் விமர்சனமும் செய்வது இல்லை. நாட்டின் விமோசனத்திற்கு 'காந்தி வழி' எவ்வளவு பயன்பட்டிருக்கிறது என்பதை அவர் அநுபவ பூர்வமாகத் தெரிந்துகொண்டிருப்பதுபோல அதிலுள்ள குறைபாடுகளையும் தெரிந்து கொண்டிருக்கிறார். அவற்றை எடுத்துக்காட்டி அவர் காந்தியடிகளிடம் விவாதிப்பதும் உண்டு. காந்திஜியின் தத்துவங்களையும் திட்டங்களையும் உபதேசம்போல ஏற்று நடப்பது அவருக்குப் பிடிக்காது. தமக்குப் பிடிக்காததை நேரடியாகச் சொல்லி நிலைமையைத் தெளிவு படுத்துவதிலே அவர் தயங்குவதும் இல்லை.

காந்தீய தத்துவம்பற்றியும் திட்டம்பற்றியும் அவர் அடிக்கடிக் கூறியுள்ள அபிப்பிராயங்களிற் சில கீழே தரப்படுகின்றன. அவற்றிலிருந்தே அவருக்கு காந்தீயக் கொள்கைகளில் உள்ள ஈடுபாட்டைப் புரிந்துகொள்ளலாம்.

"காந்தீயம் என்று ஒரு தத்துவம் இருக்கிறதாக நான் எண்ணவில்லை. ஆசார்யர்களின் புதுவழிகளையும் உபதேசங்களையும் கொண்டுதான் புது மார்க்கங்கள் ஏற்படுகின்றன. ஆனால் காந்தியடிகள் புதி

தாக எதுவும் சொல்லவில்லை. நமக்குப் பழக்கமான தத்துவங்களை வற்புறுத்தி வாழ்க்கையில் மனோதிடமும் கட்டுப்பாடும் ஏற்படவேண்டும் என்கிறார். புதுமார்க்கத்தை வகுத்து சிஷ்ய கோஷ்டிசேர்க்கும் வேதாந்தியல்ல அவர். புதுச் சமயத்தைச் சிருஷ்டிக்க அவர் விரும்பியதே இல்லை. அவர் ஒரு தீவிர சீர்திருத்த வாதி. நாட்டில் தினசரி எழும் தொல்லைகளைப் பற்றி அவர் சிந்தித்துப் பரிகாரம் தேடுகிறார்; சொல்லைவிடச் செயலையே பெரிதும் விரும்புகிறவர் அவர் ஒரு கர்மயோகி. * * *

"ஆகவே அவரது உபதேசமென்று எதையும் நாம் வகுத்துவிட முடியாது. அவருடைய பிரசங்கங்களிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் நாம் புதிய தத்துவங்களையோ வேதாந்த சர்ச்சைகளையோ கண்டுபிடித்துவிட முடியாது. ஆனால் அவர் வேதாந்திகளை விட உயர்ந்தவர் என்றுகூடச் சொல்லலாம். எதையும் தம் முடிவான அபிப்பிராயம் என்றோ, தீர்ப்பு என்றோ அவர் கூறுவதில்லை. வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் சத்திய சோதனை என்றே சொல்கிறார். * * * தவறு என்று தெரிந்ததும் அவர் அதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வதுடன் பரிகாரம் தேடவும் முயலுகிறார். சத்தியம், அஹிம்ஸை - இவற்றின் சாதனைதான் அவரது லட்சியம்:

"அரசியல் விமோசனத்திற்கு இந்த லட்சியங்களைச் சாதனை செய்யவேண்டுமென மக்களுக்கு



அவர் உபதேசித்தாலும், தத்துவோபதேசத்துடன் அவர் நிற்பதில்லை. எதிரியின் மனத்தை வசீகரிக்க வேண்டும் என்று அவர் எண்ணுகிறார். அதற்கானதும் செய்கிறார். ஆனால் அத்துடன் அநீதியால் கட்டுண்டு அவஸ்தைப்படும் மக்களை ஒன்று திரட்டி, உற்சாகப்படுத்தி, அணிவகுத்து நிற்பதில்தான் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார். பயம், மாத்சர்யம், பரஸ்பர சந்தேகம், கோழைத்தனம், சுயநலம் முதலிய தீக்குணங்களை ஒழித்து, அன்பின் பிணைப்பால் எல்லோரும் ஒன்று சேரச் செய்கிறார். துன்பப்படும் மக்கள் தாம் பிளவுபட்டு மடிவது சகஜம். அவர்களிடம் இருக்கும் தீமைக்குணங்களை அகற்றிக் கோழைத்தனத்தை விரட்டி, எல்லோரையும் ஒன்று சேர்த்து நிறுத்தப் பூர்வாங்க வேலை செய்த பிறகுதான் அவர் போர் முரசு கொட்டுகிறார். அதன் பிறகுதான் அடக்கு முறையையும் ஆணவத்தையும் அநீதியையும் எதிர்க்க முனைகிறார். * * * தீமையைக் கண்டு வெகுண்டு ஓடுவதை விட்டு, எதிர்த்து நின்று வெற்றி பெறவே அவர் வழிகாட்டுகிறார். ஒன்று வெற்றி அடைய வேண்டும்; அல்லது அந்த முயற்சியில் வீழ்ந்து, தியாகத்துடன் வீரசுவர்க்கம் புகவேண்டும் என்பதுதான் அவரது போர் முறை. ஒத்துழையாமை என்ற சிறந்த ஆயுதத்தை அளித்துக் கட்டாயம் வெற்றி கிட்டும் என்ற ஆசியும் கூறுகிறார் அவர். அந்த ஆயுதத்தைப் பிரயோகிக்கும் சாகஸத்தில் இருக்கிறது வெற்றியும் தோல்வியும். * * *

"கூலிக்காரனின் குறைகளை நிவர்த்திக்க முதலாளி மறுத்தால் கூலிக்காரன் வேலை நிறுத்தம் செய்கிறான். அதாவது முதலாளியுடன் ஒத்துழைக்க மறுக்கிறான். அதேபோலச்சர்க்காரை எதிர்த்து நிற்கும் வேலை நிறுத்தந்தான் சத்தியாக்கிரகம். வேலை நிறுத்தத்தின் அடிப்படையில் சுயநலமும் உடனடியாகப் பரிகாரமும் இருக்கின்றன. சத்தியாக்கிரகத்தில் இவற்றுடன் தார்மிக ஆதரவும் சேர்ந்துகொள்கிறது. தேசத்திற்காக, ஸர்வ ஜனங்களின் சுகிருதத்திற்காக, நாம் செய்யும் சத்தியாக்கிரகமே, தார்மிக ஆதரவு பெற்ற வேலை நிறுத்தமே, மனிதனின் மனநிலையை உயர்த்துகிறது. எதிரியின் மனத்தைத் தொட்டுத் தர்மமார்க்கத்தில் திருப்புகிறது.

"சாதாரண வேலை நிறுத்தத்தினால் தார்மிக உணர்ச்சி ஏற்படுவதில்லை. சத்தியாக்கிரகத்தினால் ஒரு புது உணர்ச்சியும் சூழ்நிலையும் ஏற்பட்டுவிடுகின்றன. ஒத்துழையாமையுடன், அதன் விளைவாக எதிரியின் கட்சியில் மனோவாக்குக் காயங்களால் ஏற்படும்தீமைகளை, புன்சிரிப்புடன் எதிர்த்துநின்று ஏற்றுக்கொள்ளும் பண்பும் பக்குவமும் சத்தியாக்கிரகிக்கு ஏற்பட்டுவிடுவதால் எதிரி திகைத்துவிடுகிறான். மனச்சாட்சி சுட்டிக் காட்டி நியாய வழியில் அவனைத் திருப்புகிறது. மனிதனுடைய மனச் சாட்சியை ஞாபகப்படுத்தி நல்வழியில் திருப்பக் காந்திஜி வழி காட்டுவதுதான் அவர் அடைந்த வெற்றி. உண்மைக்காக, நியாயத்திற்காக, அவர் கடுமையான தியாகத்தைச் செய்ய மக்களைத் தயாரித்து விட்டதுதான் அவரது பெருமை."



காந்திஜி தொழில் முறைக் கல்விபற்றி தேசத் தலைவர்களின் கவனத்தை இழுத்ததன் பயனாக உருவானதுதான் வார்தாக் கல்வித் திட்டம். கல்வித் துறையில் அநுபவமுள்ள ஆசார்ய கிருபளானி இந்தத் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது 'குழந்தை யுள்ளத்திற்கேற்ற திட்டம் இது' என்று கூறியிருக்கிறார். அவர் சொல்லுகிறார்:

"ஆராய்ச்சியும் அநுபவமும் சேர்வதால் தான் தத்துவம் உருவாகிறது. சித்தாந்தம் திடீரென உருவாகி விடுவதில்லை. ஆராய்ச்சியின் முடிவில்தான் அது தோன்றுகிறது. குழந்தைகளின் மனோதத்துவத்தை நன்றாக அறிந்துள்ள காந்தியடிகள் குழந்தைகள் பார்த்துக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் சுலபமான கல்வி முறையை வகுக்க வேண்டும் என்கிறார். நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ளும் எந்த விஷயமும் குழந்தையின் மனத்தில் சுலபமாகப் பதிந்துவிடும். வாழ்க்கையில் பயன்படக் கூடிய விஷயங்களை அநுபவ பூர்வமாகத் தெரிந்து கொள்வதில் குழந்தைகளுக்கு ஆசை அதிகம். ஆகவே சிறு தொழில்களை அவர்களுக்குப் போதிப்பதில் இரண்டுவித லாபம் உண்டு. காந்தியடிகள் குழந்தைகளுடன் நெருங்கப் பழகியவர். அவர்களுடைய மனோபாவத்தை ஆராய்ந்து அறிந்தவர். அநுபவ சாத்தியமாக அவர் கூறும் முறை பயன்

படும் என்பதில் சந்தேகமில்லை. பரீட்சித்துப்பார்க்க நமக்குப் பொறுமை வேண்டும்.

"தற்காலக் கல்வி முறையில் லட்சியம் கிடையாது. வாழ்க்கைக்குப் பயன்படும் மார்க்கமும் கிடையாது. அந்தக் கல்வி முறையின் குறிக்கோள் ஒன்றுதான். அந்நிய அரசாங்கத்தின் குற்றேவல்காரராகவும் குமாஸ்தாக்களாகவும் இந்திய வாலிபர்களை மாற்றுவதுதான் அது. நிறத்திலும் உடையிலும் தவிர, நம்மை மற்ற எல்லா அம்சங்களிலும் ஆங்கிலேயர் வழிபற்றும் ஓர் இரண்டுங் கெட்டான் கும்பலாக மாற்றி விடும் வண்ணம் தயாரித்த திட்டந்தான் அது. தற்காலக் கல்வி முறையினால் நன்மையில்லை என்பது ஒருபுறமிருக்க, சாதாரண மக்களுடன் நெருங்கிப் பழக முடியாது ஒரு போலிக் கௌரவத்தைப் போதித்துப் படித்தவர்களை ஒதுக்கி வைக்கும் தீமைதான் அதில் மேலோங்கி இருக்கிறது. அண்டை அயலானை அந்நியனைப் போல எண்ணவும் அந்நிய நாட்டிலிருந்து வந்தவனையும் அவனது நாகரிகப் பண்பையும் சொந்தமாக எண்ணவும் ஒரு மனமயக்கத்தை அது சிருஷ்டித்து விட்டது. இந்த நிலைமை மாறவேண்டும். நாம் எல்லோரும் ஒரு குலம் என்ற மனோபாவமும், கல்வியினால் பெற்ற அநுபவம் வாழ்க்கையில் பயன்படும் முறையும் நமக்கு வேண்டும். அதற்குத்தான் காந்தியடிகள் வழி காட்டுகிறார்.

"அந்நிய மோகத்தை நீக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் காந்தியடிகள் புரட்சிகர



மான திட்டங்களை நமக்குத் தரவில்லை. நமது பொருளாதார, கலாசார, தார்மிக முன்னேற்றத்துக்கான திட்டங்கள் உருவாகத்தான் அவர் வழி காட்டுகிறார்.

"மார்க்ஸும் பிற மேல்நாட்டு அறிஞர்களும், பொருளாதாரப் புரட்சிக்கு வழி காட்டினார்கள். அதன் பலனாக ஐரோப்பாவில் அற்புதமான மாறுதல்கள் நிகழ்ந்தன. ஆனால் அவர்கள் கனவு கண்ட புதிய சமுதாயம் இன்னும் உருவாகவில்லை. பொருளாதார தாரதம்மியத்தினால் மட்டும் சமூகத்தில் குறைபாடு இல்லை. தார்மிக பலம் குன்றியதால் தான் இன்று உலகமே நிலை கலங்கிக் கிடக்கிறது. தார்மிக பலம் பெற்றுப் பொருளாதார சுபிக்ஷமுள்ள வர்க்கபேதமற்ற ஒரு புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்கத்தான் காந்தியடிகள் பாடுபட்டு வருகிறார். தனி மனிதர்களின் துணிவினாலும் உழைப்பினாலுந்தான் சமுதாயம் தோன்றவேண்டும். அதற்கு ஒவ்வொரு மனிதனும் மனோபக்குவம் அடைய வேண்டும். சமுதாயத்தில் தனக்குள்ள பொறுப்பும் கடமையும் உணர்ந்து நடக்கவேண்டும். திடீரெனப் புரட்சி யுண்டுபண்ணி சமுதாயத்தைத் திருத்தி அமைத்துவிட முடியாது. பாமரன் முதல் படித்தவன் வரை, புரிந்து அநுஷ்டிக்கும் முறையினால்தான் சமுதாயத்தில் மாறுதல் ஏற்படமுடியும். எல்லோருடைய உள்ளத்தையும் தொடும் ஆற்றல் பொருளாதார தத்துவத்திற்குக் கிடையாது. தார்மிக பலத்திற்குத்தான் அந்தச் சக்தி உண்டு.

அதைத் திறமையாக மேற்கொண்டு புரட்சி ஏற்படுத்தவே இன்று காந்திஜி புதுமுறைகளை அனுஷ்டித்து வருகிறார். ஜன நாயகம், சமத்துவம் என்பவற்றுடன் அன்பு அஹிம்சை என்ற தர்மவழி காட்டி அவர் விதம் விதமான திட்டங்களை வகுத்துவருகிறார். பொருளாதார சுபிக்ஷத்திற்காக வகுக்கும் திட்டங்களிலும் அவர் தார்மிக போதனை செய்யத் தவறுவதில்லை. கிராமக் கைத்தொழிலும், கதரும், அவரது பொருளாதாரத் திட்டத்தில் மிகச் சிறந்தவை. முதலாளித்வ தீமையை ஒழித்து ஒவ்வொருவரும் தனித்து வாழும் தன்மையையும் வழியையும் காட்டுகின்றன, கிராமக் கைத்தொழிலும் கதர்த் திட்டமும்.

“மனிதன் யந்திர வளர்ச்சியினால் மனிதத் தன்மை மறந்துபோய் வேகம், நாகரிகம், ஆடம்பரம் இவற்றினால் கட்டுண்டு, சோம்பேறியாகி விடுகிறான். அவனிடமுள்ள தார்மிகக் குணம் மாறிச் சுயநலமும், மிருகவெறியும் ஓங்கிவிடுகின்றன. இந்தமாதிரியான தீக்குணங்களினால் அவன் கீழ்நிலை அடையாமல் காப்பாற்றும் சக்தி, இந்தத் திட்டங்களுக்கு உண்டு.

“அரசியல் போராட்டத்தில்கூட அஹிம்சையும் சத்தியமும் போதிக்கும் காந்திஜி மாத்சர்யமும் சுயநலமும் குன்றி, அன்பும் அஹிம்சையும் வளரத் தோன்றும் புதிய சமுதாயத்தைச் சிருஷ்டிக்க, தன்னம்பிக்கையும் சுதந்தர ஆர்வமும் போதிக்கிறார்.



பிறரை அண்டி வாழாமல் தன் உழைப்பினால் வாழ முடியும் என்ற எண்ணம் சிறு பிராயத்திலேயே மனத்தில் பதிவதுடன், எண்ணத்திற்கு ஏற்ப வாழ்க்கையிலும், சுயமாக உழைத்துக் சம்பாதிக்கத் தொழிலும் போதிக்க வேண்டும் என்பதுதான் அவரது அவா. இந்த அடிப்படையில்தான் அவரது புதுமுறைக் கல்வித் திட்டம் தோன்றுகிறது. திட்டத்தின் உருவத்தைப்பற்றி அனுபவ சாத்தியமான முறைகளை வகுத்துக் கொள்வது வேறு. திட்டத்தின் லட்சியத்தை நமக்குச் சொல்லிவிட்டார் காந்திஜி. அதை அமலுக்குக் கொண்டுவர ஒரு திட்டத்தை வகுத்துக்கொள்வது மற்றவர்களின் வேலை.”

புரட்சி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த கிருபளானிக்குச் சிந்தனையைச் செயலில் ஆற்ற வழியும் சந்தர்ப்பமும் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தபோது அவரது வாழ்க்கையில் காந்திஜி குறுக்கிட்டார். ரகசியக்கூட்டமும் பேச்சும் அவருக்குப் பிடிக்கவில்லை. காந்தியடிகளின் போதனையில் எதிரியைத்திணறடிக்கும்மார்க்கம் இருந்தது. அறியாமையும் கோழைத்தனமும், ஏழைமையும் பீடித்து, ஆயுத பலமற்றுக் கிடக்கும் பாமரர்களை ஒன்று திரட்டி, ஏகாதிபத்தியத்தை எதிர்க்க ஒரு திட்டமும், ஏழைகளுக்குப் பசியாறச் சோறுபோடக் காமதேனு போன்ற கதர் இயக்கமும் காட்டி, அவர் தேச பக்தர்களைத் தமது கொடியின்கீழ் ஒன்று திரட்டும்போது இரகசிய சங்கங்களினாலும்,

சாதாரண ஆயுத பலத்தாலும் ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராடக் கூடிப் பேசும் பலாத்கார இயக்கத்தில் என்ன பயன்?''

காந்திஜியின் திட்டங்களில் ஒத்துழையாமையும் கதருந்தான் கிருபளானியை வசீகரித்தவை. இரண்டிலும் பேச்சிற்கு இடமில்லை. செயலாற்ற வேண்டிய திட்டம் இவை. ஆகவே புரட்சி புரட்சி என்று ஆவேசத்துடன் பேசும் வாலிபர்களையும், ஆவேசக்காரர்களையும் கண்டால் அவர் கிண்டல் செய்வதுண்டு. சென்ற யுத்தத்தில் ரஷ்யா கலந்து கொண்டதும் நம் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் சர்க்கார் கட்சியில் சேர்ந்து இந்த யுத்தம் ஜனநாயக யுத்தம் என்று கோஷிக்க ஆரம்பித்தார்களல்லவா? ஒரு சமயம் அலகாபாத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக் கூட்டம் நடந்தது. சுயராஜ்ய பவனத்திற்கு அருகே அமைக்கப்பட்ட பந்தலில் நடந்த மாணவர் கூட்டத்தில் கம்யூனிஸ்டுத் தலைவர் ஒருவர் ஆவேசமாகப் பேசி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தார். மிகவும் ரசமாகவும் தர்க்கரீதியாகவும் பிரசங்கம் இருந்தது. அந்தக் கூட்டத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென ஆசார்ய கிருபளானிக்கும் அழைப்பு வந்தது. ஆனால் அவர் சுயராஜ்ய பவனத்திற்குப் பக்கத்திலுள்ள மைதானத்தில் நடந்துகொண்டிருந்த கிரிக்கட் பந்தயம் பார்க்கச் சென்றாராம். சாதாரணமாக அவர் இம்மாதிரிப் பந்தயங்களுக்குச் செல்வதே இல்லை. யாரோ ஒருவர் ''என்ன விசேஷம்? 'மாட்சு' பார்க்க வந்திருக்கிறீர்களா'' என்று ஆச்சரியமாகக்



கேட்டபோது, தூரத்தில் பறந்துகொண்டிருந்த சம்மட்டியும் அரிவாளும் பொறித்த சிவப்பு ஜண்டாவைக் காட்டி, ''கம்யூனிஸ்டுக் கூட்டத்தை விடக் கிரிக்கட் மாட்சு ரம்யமாயிருக்கிறது'' என்று பதில் அளித்தாராம்.

மனத்திற்குப் பிடிக்காததைப் பளிச்செனச் சொல்லிவிடுவதுடன், கிண்டலாகவும், சுருக்கெனப் படும்படி ஹாஸ்யமாகவும் பேசுவதில் கிருபளானி வல்லவர். வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் கிருபளானியைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''அவர் காங்கிரஸ் முகாமிலிருக்கும் பெர்னாட் ஷா'' என்று சொன்னார். கிருபளானியின் பேச்சும் பிரசங்கமும் ஷாவின் பேச்சுக்கும் ஹாஸ்யத்திற்கும் ஈடானவைதாம்.

யுத்தத்தில் இந்தியா கலந்து கொண்டதை எதிர்த்துக் காந்திஜி பிரதிநிதித்வ சத்யாக்கிரகம் ஆரம்பித்தபோது, தம்மிடம் அநுமதிபெற்றவர்களே சத்யாக்கிரகம் செய்ய அருகதையுள்ளவர்கள் என்று ஒரு விதி ஏற்படுத்தினார். ஒவ்வோர் ஊரிலிருந்தும் காங்கிரஸ் கமிட்டிகள் சத்தியாக்கிரகம் செய்ய முன்வந்துள்ள நபர்களின் பெயரையும் சேவையையும் குறிப்பிட்டுக் காந்திஜிக்குச் சிபாரிசு செய்தன. காந்திஜி அவற்றைப் பரிசீலனை செய்து சத்தியாக்கிரகிகளைப் பொறுக்கி எடுத்தார். அந்தச் சமயத்தில் அகில இந்தியக்காங்கிரஸ் கமிட்டியின் கிளைக்காரியாலயம் ஒன்று வர்தாவில் திறந்து வைக்கப்பட்டது. ஆசார்ய கிருபளானியும்

வர்தாவில் தங்கிக் காந்திஜிக்கு உதவி செய்து கொண்டிருந்தார்.

காந்தியடிகள் மிகவும் கடுமையான நிபந்தனைகள் விதித்தும் சத்தியாக்கிரகிகள் பலர் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாமலும் புறக்கணித்தும் சத்தியாக்கிரகம் செய்தனர். சிலர் எதிர்காலத்தில் நடக்கும் தேர்தல்களில் இடம்பெற வேண்டுமென்னும் நோக்குடனேயே சத்தியாக்கிரகம் செய்ய முன்வந்தனர். காந்திஜி எவ்வளவோ வடிகட்டினாலும், போலித் தேச பக்தர்களின் எண்ணிக்கை குறையவில்லை.

தென்னாட்டு நண்பர் ஒருவர் சத்தியாக்கிரகம் செய்தார். ஊரில் பிரபலஸ்தர்; இருந்தாலும் போலீஸார் அவரைக் கைதி செய்யவில்லை. கைதியாகாத சத்தியாக்கிரகிகள், கிராமம் கிராமமாகப் பிரசாரம் செய்துகொண்டே டெல்லியை நோக்கிச் செல்ல வேண்டுமென்று காந்திஜி ஒரு நிபந்தனை போட்டிருந்தார். இந்த நண்பர் சத்தியாக்கிரகம் செய்த பத்துத் தினங்களுக்கெல்லாம் வர்தா சென்று காந்திஜியைத் தரிசித்தார். ஊரிலிருந்து அவர் ரெயிலில் பிரயாணம் செய்துதான் வர்தாவுக்குச் சென்றார். தென்னாட்டிலிருந்து வந்த முதல் சத்தியாக்கிரக என்ற பெயர் கிடைக்கவேண்டுமென்ற ஒரே அவாதான் அவருக்கு இருந்தது. அவர் சத்தியாக்கிரக நிபந்தனைகளை மீறியிருக்கிறாரா இல்லையா என்றுகூடக் காந்திஜி சிந்திக்கவில்லை. சத்தியாக்கிரகிக்குப் பொய்சொல்ல அவசியமிராது. அதுவும் தளகர்த்தனிடமே சொல்லவேண்டிய அவசியம்



ஏற்படாது. துணிவும் வராது அல்லவா? டெல்லிக்குச் சென்று தமக்குத் தெரிவிக்கும்படி ஆசீர்வதித்து அனுப்பினார் காந்திஜி. பின்பு அந்த நண்பர் ஆசார்ய கிருபளானியைச் சந்திக்க நேர்ந்தது. சத்தியாக்கிரக விதிகளை மீறிவிட்டதுடன் காந்திஜியை நேரில் காணும் துணிச்சலும் நண்பருக்கு ஏற்பட்டதைக் காண அவருக்கு வெறுப்பும் ஆத்திரமும் வந்தன. சத்தியாக்கிரக விதிகளை ஒழுங்காக அவர் நிறைவேற்றினாரா என்றுகூடக் கேட்கவில்லை. அவருடன் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, திடீரென, "உங்களைக் காங்கிரஸின் சார்பாக 'ஒலிம்பிக்' பந்தயத்திற்கு அனுப்பலாமென எண்ணுகிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

நண்பருக்கு ஒன்றும் புரியவில்லை. திகைப்புடன் "ஏன்?" என்று கேட்டார்.

"இல்லை, பத்தே தினங்களில் நூற்றுக் கணக்கான மைல்கள் நடக்கும் ஆற்றல் உங்களுக்கு இருப்பதால் ஓட்டப் பந்தயத்தில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள் அல்லவா?" என்றார்.

பாவம்! நண்பரின் முகத்தில் அசட்டுக் களை சொட்டிற்று. சுதேச சமஸ்தானங்களைத் தாண்டி வரும்போது சத்தியாக்கிரகிகள் பிரசாரம் செய்யக் கூடாது என்று காந்திஜி கூறியிருப்பதால், ஹைதராபாத் சமஸ்தானத்தைத் தாம் தாண்டி ரெயிலில் வந்ததாகச் சமாதானம் கூற ஆரம்பித்தார்.

நண்பர் விடைபெற்றுச் சென்றார். அதன் பிறகு, சத்தியாக்கிரகிகள், தாங்கள் வரும் பிர தேசங்களைப் பற்றிய குறிப்பும், கிராமத்தில் சந் தித்த பிரமுகர்களைப்பற்றிய தகவலும் காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற உத்தரவு கிளம்பிற்று, காந்திஜியிடமிருந்து.

மற்றுமொரு சம்பவம். தமிழ்நாட்டு நண்ப ரொருவர் காந்திஜியை நேரில் காண வர்தாவுக்குச் சென்றார். ரெயிலிலிருந்து பெட்டி படுக்கையுடன் குதிரை வண்டியிலேறி நேரே ஆசிரமத்திற்குச் சென்றார். ஆசிரம வாயிலில் ஆச்சார்ய கிருபளா னியை அவர் சந்திக்க நேரிட்டது. அவரை நண்ப ருக்குத் தெரியாது. யாரோ ஆசிரமவாசி என்று எண்ணிக்கொண்டு, அவரிடம் காந்திஜியின் காரிய தரிசியைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்.

கிருபளானி மகாதேவ தேசாய் இருக்கும் வீட்டை நண்பருக்குக் காட்டிவிட்டு, "நீங்கள் உள்ளூரில் எல்லா ஏற்பாடும் செய்துவிட்டீர்களோ? போலீஸ் சூபரிண்டெண்டிற்குத் தகவல் தெரியு மோ?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். நண் பர் திகைத்துவிட்டார். அவருக்குக் கேள் விபுரிய வில்லை. உடனே கிருபளானி, "காந்திஜியிடம் அனு மதி பெறத்தானே நேரில் வந்தீர்கள்?" என்று கேட் டார். அப்போதுதான் புரிந்தது நண்பருக்கு. தாம் சத்தியாக்கிரகம் செய்ய விரும்பவில்லை யென்றும், கிராம சேவை செய்துவரும் ஊழியன் என்றும், தமது கிராமத்தில் ஏற்பட்டுள்ள சில அரசியல் சிக்கல்களைக் காந்திஜிக்கு ஏற்கனவே தெரிவித் திருப்பதாகவும், இப்போது அவர் விருப்பப்படி நேரில் தெரிவித்துப் பரிகாரம் தேட வந்திருப்ப தாகவும் கூறினார்.



செல்வாக்குப் பெறும் நோக்கத்துடன் சத்தி யாக்கிரகம் செய்ய முன்வந்த பிரமுகர்களையும், நேரில் காந்திஜியிடம் அநுமதி பெற்று, சத்தியாக்கி ரகம் செய்து சிறைத்தண்டனைபெற ஏற்பாடு செய்து கொண்டுள்ள சத்தியாக்கிரகிகளின் செயலையும் கண்டு கிருபளானி மனம் பதைத்தார். தூய்மை யான இயக்கத்தை ஒன்றிரண்டு கயவர்கள் கறைப் படுத்துகிறார்களே என்று எண்ணி ஏங்கிவிடாமல் உடனுக்குடன் மாற்றுத் தேடி, இயக்கத்தை வலு வடையச் செய்தார். சுயநல நோக்கத்துடன் காங்கி ரஸில் சேர்ந்து சேவை செய்யும் பிரமுகர்களைக் கண்டு அவர் என்றுமே வெறுப்புக் காட்டுவது வழக்கம். சத்தியத்திற்காகவும் தேசத்திற்காகவும் தியாகம் செய்யும் வீரர்களை அவர் கௌரவிப்பதி லும் பின்வாங்குவதில்லை.

"ஆளைப்பார்த்து முரடன் என்று நாம் தீர்ப் புக் கூறிவிடக் கூடாது. சுறுக்குச் சுறுக்கென அவர் பேசும் வார்த்தைகளைக் கண்டு பயப்படக் கூடாது. ஹாஸ்யமும் கேளிக்கையும் நிரம்பிய காரியவாதி அவர். பேசுவதைப் பார்த்தால் ஆசாமி வெறும் விதண்டாவாதக்காரர் என்று தோன்று கிறதே என்று முடிவு கட்டிவிடக் கூடாது. நிதானித் துப் பார்த்தால்தான் அவரது பேச்சும் வியாக்கி

யானமும் அர்த்த புஷ்டியுள்ளவை என்பது மனத்தில் படும்'' என்று ஆசார்ய கிருபளானியைப்பற்றி அவரது வாலிபத் தோழனை ஆசார்ய மால்கானி குறிப்பிட்டிருக்கிறார்.

புரட்சி மனப்பான்மையுடன் புரட்சிகரமான வாழ்க்கையும் நடத்திவரும் கிருபளானியின் வாழ்க்கைத் துணைவியும் ஒரு புரட்சி மனப்பான்மையுடையவர்தாம். அரசியல் புரட்சியின் தாயகமான வங்கத்திலே பிறந்த ஸ்ரீமதி சுசேதா, கிருபளானியை மணம்புரிந்து கொண்டபின்பு தேச சேவையில் முழுமனத்துடன் ஈடுபட்டார். துணிச்சலும் ஆர்வமும் வங்கப் பெண்களுக்கு இயல்பாக ஏற்பட்ட குணங்கள். அவற்றுடன் தளராத சேவையும் சாகஸமும் சேர்ந்து அமைந்திருக்கின்றன ஸ்ரீமதி கிருபளானியிடம். காதலின் கனிவால் அவர்கள் கல்யாணம் செய்துகொண்டனர் என்று சொல்வதற்குப் பதில் தேச சேவையில் ஒன்றுபட்ட மனோபாவமே ஆசார்ய கிருபளானியையும் ஸ்ரீமதி சுசேதாவையும் ஒன்று சேர்த்தது என்றே சொல்லவேண்டும். ஆசார்ய கிருபளானி கிராம மக்களுக்கு வழிகாட்ட கதர் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார். அவருடைய மனைவி கிராமப் பெண்களின் முன்னேற்றத்திற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள கஸ்தூரிபா ஞாபகார்த்த நிதியின் பொதுக் காரியதரிசி பதவி ஏற்று இரவும் பகலும் சேவை செய்துவருகிறார்.

புத்தகங்களும் புஷ்பங்களும் ஆசார்ய கிருபளானிக்கு மிகவும் பிரியமானவை. அலகாபாத்திலும்,



மீரட் காந்தி ஆசிரமத்திலும் அவர் ஒரு சிறந்த புத்தகசாலையை ஏற்படுத்தி யிருக்கிறார். மீரட்டிலுள்ள வாசகசாலையில் சிறந்த இலக்கிய புத்தகங்களும், அவருக்குப் பிரியமான காவியங்களும் இருக்கின்றன. ஓய்வு வேண்டும்போது கிருபளானி ஆசிரமத்திலுள்ள புத்தகசாலைக்குச் சென்று படித்துக் கொண்டே யிருப்பாராம்.

இலக்கியத்திற்கு அடுத்தபடியாக அவரது மனத்தை ஆகர்ஷிப்பது புஷ்பங்கள். வண்ண ஜாலங்கள் நிறைந்த புஷ்பங்களைவிட வாசனைப் புஷ்பங்களைத்தான் அவர் அதிகமாக விரும்புவார். அலகாபாத்திலுள்ள சுயராஜ்ய பவனத்தில் அவர் மிகவும் அழகான நந்தவனம் அமைத்திருந்தார். ஆகஸ்டுப் புரட்சியின்போது சுயாராஜ்ய பவனம் போலீஸ் வசப்படவும் நந்தவனம் கவனிப்பாரற்று அழிந்தது. அவரது புத்தகசாலையிலும் கறையான் புகுந்து அட்டகாசம் செய்தது.

காங்கிரஸ் கமிட்டியின் தஸ்தாவேஜுகளும் காரியதரிசியின் அருமையான புத்தகசாலையும் அழியாது காப்பாற்றப்பட வேண்டும் என்று நாடெங்கும் கிளர்ச்சி நடந்த பின்புதான் அதிகாரிகள் சுயராஜ்ய பவனத்திற்குள் நுழைந்து தூசியைத் தட்ட ஆரம்பித்தனர்.

● மதப்பற்றும், சம்பிரதாயங்களில் பிடிப்பும் இல்லை என்றாலும் ஆசார்ய கிருபளானி தெய்வ பக்தியுள்ள சிறந்த ஹிந்து. ஆடம்பரங்களைக் கண்டால் அவருக்கு அடியோடு பிடிக்காது. சாஸ்திரத்திலும்

சம்பிரதாயத்திலும் அவருக்குத் தீவிரப் பற்று இல்லையானாலும் தார்மிக உள்ளமும், தெய்விக சக்தியில் நம்பிக்கையும் உள்ளவர். ஒரு சமயம் நண்பர் ஒருவருடன் அவர் கடைத்தெருவுக்குப் போக நேர்ந்தது. ஒரு கடைக்காரனிடம் சாது ஒருவர் யாசகம் கேட்டாராம். அவன் செவிசாய்க்கவில்லை. மீண்டும் மீண்டும் சாது அவனைக் கேட்கவே அவன் வெகுண்டு அவரை அடித்துத் துரத்தினானாம். அடிபட்ட அந்தச் சாது மிகவும் நிதானமாக, 'நன்றாக இரு அப்பா' என்று சொல்லிச் சென்றாராம். ஆனால் அந்தத் தொனியிலே அவரது உள்ளக்கொதிப்புத் தெளிவாகத் தென்பட்டது. சாது கடைத்தெருவின் கோடி திரும்பு முன்னேயே அந்தக் கடையில் திடீரென்று தீப் பிடித்துக் கொண்டது. பக்கத்திலிருந்த விளக்கை யாரோ தற்செயலாகத் தட்டி விட்டதனால்தான் அந்த விபத்து நேரிட்டது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அந்தச் சாதுவின் சாபத்தினால் ஏற்பட்ட விபத்து என்றுதான் கூறினார்கள். ஆசார்ய கிருபளானி இம்மாதிரிச் சம்பவங்களில் ஆழ்ந்து அபிப்பிராயம் கூறுவதில்லை என்றாலும் அன்று தமது நண்பரிடம் பெரியவர் வாக்குப் பலித்துவிட்டது என்று கூறியதுடன், "இப்படித்தான் ஒரு நாள் ஏகாதிபத்தியமும் அதன் சர்க்காரும் பற்றியெரியப் போகிறது. அஹிம்ஸா மூர்த்தியான காந்தியடிகளின் பொறுமையும் உள்ளக் கொதிப்பும் வீண்போகாது" என்றாராம்.

காந்திவழிபற்றி நடக்கும் கிருபளானிக்கும்



ஆடம்பரத்திற்கும் அதிக தூரம். மீரட்டில் நடந்த காங்கிரஸ், ஆறு வருஷத்திற்குப் பிறகு நாட்டில் நடந்த அரசியல் கொந்தளிப்பு ஓய்ந்த பின்பு கூடியதால் மிகவும் தடபுடலாக நடத்த ஏற்பாடு செய்தனர் ஐக்கிய மாகாண வாசிகள். மீரட் ஜில்லா வாசிகளோ, சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் தங்களுடன் வசித்துவந்த நண்பரை ராஷ்டிரபதியாகக் கௌரவிக்கப் போகிறோம் என்ற உற்சாகத்தால் பலத்த ஏற்பாடுகள் செய்தனர். ஆனால் காங்கிரஸ் கூடுவதற்குச் சில தினங்களுக்கு முன்பே சில முஸ்லிம் வெறியர்களால் மீரட் ஜில்லாவில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டது. அதுகண்டு உளம் பதைத்த ராஷ்டிரபதி மிகவும் சுருக்கமாகவும் ஆடம்பரமின்றியும் காங்கிரஸ் நடத்த வேண்டுமென நிர்வாகிகளுக்குக் கூறினார். அதனால் ஊர்வலம், கதர்க் கண்காட்சி முதலிய பல்வேறு அம்சங்கள் நிறுத்தப்பட்டன.

காங்கிரஸில் கூட நெருக்கடியான சமயத்தில் தேச மக்கள் ஒன்று கூடுகிறார்கள் என்பதை ஞாபகப் படுத்தும் வண்ணம் இருந்தன நடவடிக்கைகள். சென்ற ஆறு வருஷங்களில் நாட்டில் நடந்த சம்பவங்களையும் காங்கிரஸின் நிலைமையையும் மிகவும் தெளிவாகவும் அழகாகவும் தமது தலைமையுரையில் எடுத்துரைத்தார் ஆசார்ய கிருபளானி. தளகர்த்தன் ஒருவன் தமது வீரர்களுக்கு இருக்கும் நிலைமையை எடுத்துரைப்பது போல்தான் இருந்தது அவரது பேருரையும்.

காங்கிரஸின்போது நேருவும் சர்தார் படேலும்

நிகழ்த்திய பேருரைகள் சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டன என்றுதான் சொல்லவேண்டும். காங்கிரஸின் நிலைமையை அவர்கள் தெளிவுபடுத்தி ராஜீயச் சிக்கலை முறிக்கவும் அவர்கள் அவாவுற்றனர். ஆனால் அரசியல் சதுரங்கத்தில் உள்ள மற்றக் கட்சிச் சிக்கலைத் தீர்க்கத் தம் காய்களை நகர்த்தாது ஏகாதிபத்தியம் போடும் தூபத்தால் மயங்கித் திகைத்து நிற்கிறது. சாணக்கிய சாஸ்திரத்தில் ராஷ்டிரபதிக்கு அதிக அநுபவம் இல்லை என்றாலும் அவர் காந்தீயப் போர்முறையில் பண்பட்ட தளகர்த்தர். அவருடைய சகாக்களும் சாணக்கியம் மிகுந்த சாகஸிகள். ஆகவே காங்கிரஸ் எதிர் நிற்கும் இருளைக் கிழித்து சுலபமாக முன்னேறிச் செல்ல முடியும். "ஜோதியை ஏற்றி விட்டோம். அதை அணையாது காப்பாற்றி, அது காட்டும் வழியில் நாம் முன்னேறுவோம்" என்று ராஷ்டிரபதி கிருபளானி தமது தலைமைப் பேருரையில் சொன்னதுபோல, அவர் ஏற்றிவைத்த ஜோதியைப் பின்பற்றி அடிமை இருளை அகற்றி நாடு சுதந்தரமடைய வழிகாட்டி வேண்டும். இன்னும் ஒரு போராட்டமின்றி நாம் சுதந்தரம் அடைய முடியாது என்று நம் தலைவர்களில் பலர் கூறுகிறார்கள். நாட்டின் நிர்வாகப் பொறுப்பைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட, அடுத்துவரும் போராட்டத்தின் சூசகங்கள் தோன்றிக்கொண்டு தான் இருக்கின்றன.

இருள் விலகி நாம் சுதந்திரப் பாதையில் முன்னேற வேண்டும் என்பதுதான் மக்களின் கோரிக்கை.



ஆனால் எதிர்த்துவரும் பகைக்கு அடிபணிந்து நிற்பது சத்தியாக்கிரகியின் தர்மமல்ல. எதிர்த்து நின்று வெற்றி பெறுவோம் அல்லது பொருது வீழ்வோம் என்னும் தீரமுடைய நமக்குச் சிறந்த சத்துயாக்கிரகியான கிருபளானியே வழிகாட்டும் தலைவராக, காங்கிரஸ் பிடத்தில் இருப்பதால் போரைப்பற்றியும் கவலையில்லை. வெற்றி தோல்வியைப் பற்றியும் சிந்தனையில்லை. போர் முரசு கேட்டால் அணிவகுத்து நிற்போம். அதை நடத்திச் சென்று வெற்றி காணும் பொறுப்பு நாட்டின் தலைவர்களைச் சேர்ந்தது. சத்தியம் அஹிம்சை என்ற ஆயுதங்களைத் தாங்கிப் போர் செய்யும் நமக்குத் தார்மிக பலம் உண்டு. தியாகத்தின் எல்லையில்தான் வெற்றியிருக்கிறது. அதைத் தொடுவதற்கு நம்மை அணிவகுத்துச் செல்லும் ஆற்றலும் துணிவும் ஆண்டவன் ராஷ்டிரபதிக்கும் மற்றத் தேசத் தலைவர்களுக்கும் தரவேண்டும்.

V2:5147 M87
N47
108367
4-4-59

# புயல்

மகாகவி டாகூர்

62 - அத்தியாயங்கள்

மொழிபெயர்ப்பு:— த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.

மலிவுப் பதிப்பு ரு. 5-0-0 உயரிய பதிப்பு ரு. 6-0-0

— புகழ்மொழிகளிற் சில —

ஆனந்த விகடன்: டாகுர் எழுதியுள்ள நவீனங்களுள் மிகச் சிறந்ததென்று கருதப்படும் "புயல்" என்ற காதற் கதை இப்போது வெகு அழகாகத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, உயர்ந்த முறையில் அச்சாகி வெளியாகியிருக்கிறது. மனத்தை கவரும் விதமாக பைண்ட் செய்யப்பட்டிருக்கும் இப்பிரசுரம் புத்தகசாலைகளிலும் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

சக்தி: இனிமையும் தெளிவும் இயல்புமான தெள்ளிய நடையில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர் குமாரசுவாமி. அச்சும் பதிப்பும் அருமையா யிருக்கிறது.

ஹிந்துஸ்தான்: அற்புதமான நவீனம் 'புயல்'. அமிர்தம் போன்ற தமிழ்நடை டாகுரின் நவீனத்தைச் சிறப்புறச் செய்கிறது. மனத்துக்குத் திருப்தியளிக்கும் ஒப்பற்ற நவீனம்.

பாரததேவி: ஒவ்வொரு புத்தகசாலையிலும் வீட்டிலும் இருக்கவேண்டிய அரிய பொக்கிஷம்.

நாரதர்: இது ஓர் அழகிய வாழ்க்கைச் சித்திரம்.

கலைமகள்: பெரிய கதை; முடிவுவரை ஸ்வாரஸ்யம் சிறிதும் குறையாமல் கதைப்போக்கு இருக்கிறது. எளிய தெள்ளிய மொழிபெயர்ப்பு. நல்ல பதிப்பு.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

# ஆனந்த மடம்

வங்க மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்கள்

மிக்க அழகாய் மொழிபெயர்த்தது.

ரு. 2—8—0

மதிப்புரைகளிற் சில

தனவணிகன்: தமிழ் மக்கள் அவசியம் படிக்கவேண்டிய நூல்களுள் இது ஒன்று. மொழிபெயர்ப்பு அருமையாய் இருக்கிறது. கண்கவர் முறையில் அமைந்த புத்தகம்.

கலாசேவகி: சொல் அமைப்பு இலகுவாயும், கற்பனை வெகு நேர்த்தியாயும், கதைப்போக்கு விறுவிறுப்பாயும் இருக்கின்றன.

நவசக்தி: இந்தியாவுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்டியது ஆனந்த மடம். மொழிபெயர்ப்பு நன்றாயிருக்கிறது.

ஹனுமான்: இக் கதையின் போக்கே நூதன வசீகரம் படைத்தது. தேசிய ஆவேசத்தை ஊட்டும் இந்த நவீனத்தைப் படிக்கும்போது, ஒரு கதையைப் படிப்பதுபோன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்படவில்லை. மொழிபெயர்ப்பு என்ற எண்ணமும் நமக்கு உண்டாகவில்லை. எளிய லலிதமான தமிழ் நடை. உயர்ந்த நாவல், நல்ல மொழிபெயர்ப்பு.

மணிக்கொடி: பங்கிம் பாபுவின் மூலத்திலுள்ள வேகம் பூராவையும் கொண்டுவந்திருக்கிறார். அழகான வர்ணனைகளை நன்கு மொழிபெயர்த்திருக்கிறார்.

கலைமகள்: வர்ணனைகள் எல்லாம் தத்ரூபமாகக் கண் முன் வந்து நிற்கின்றன. இயற்கை வர்ணனைகளை அநாயாசமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆரண்யத்தின் காட்சிகள், பஞ்சத்தின் கொடுமை, ஆனந்த மடம், சந்தானர்களின் போர் முதலியவை உயர்ந்த சித்திரங்கள்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4



# தலைவர்

# ஜ வா ஹ ர்

எழுதியவர் :
தி. ஜ. ர.

ரூ. 3—8—0

உள்ளுறை


1 வம்சமும் தந்தையும்
2 பாலியப் பருவம்
3 வீட்டிலே வாத்தியார்
4 சீமைப் படிப்பு
5 ஊர் திரும்பியபின்
6 தொழிலா, அரசியலா?
7 மணமும் மலைப்பயணமும்
8 தந்தையின் மனமாற்றம்
9 கிராமங்களிலே திரிதல்
10 முதல் சிறைவாசம்
11 வெளிவந்தபோது
12 சில அனுபவங்கள்
13 ஐரோப்பாவில்
14 போலீஸ் தடியடி
15 தந்தைக்குப்பின் மகன்
16 உப்புப்போர் ராஷ்டிரபதி
17 மோதிலாலின் மறைவு
18 ராஜியும் ராஜிமுறிவும்
19 சிறை ஜன்னல் வழியே
20 கமலாவின் பிரிவு
21 முஸோலினியைக் காண மறுப்பு
22 மூன்றாம் முறை காங்கிரஸ் மகுடம்
23 அக்காளும் தங்கையும்
24 நாஜி அழைப்பு - நிராகரிப்பு
25 திரிபுரியும் பின்னரும்
26 "வெளியே போ"
27 விடுதலையும் வரவேற்பும்
28 வேவல் திட்ட முறிவு
29 மந்திரிகள் தூது
30 காஷ்மீரச் சம்பவம்
31 முதல் இந்திய தேசிய சர்க்கார்
32 லீகர் பிரவேசம்
33 அரசியல் நிர்ணய
34 பிரிட்டிஷ் வாபஸ் கெடு


அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4